**පරිපාලන කටයුතු පිළිබඳ පාර්ලිමේන්තු කොමසාරිස් (ඔම්බුඩ්ස්මන්) කාර්යාලය**

**நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் (ஒம்புட்ஸ்மன்)**

**OFFICE OF THE PARLIAMENTARY COMMISSIONER FOR ADMINISTRATION (OMBUDSMAN)**



# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# Annual Performance Report

# 2025

වැය ශීර්ෂ අංකය

**செலவீன தலைப்பு இலக்கம் 022**

**Expenditure Head No**


**පළමු මහල, අංක-14, ආර්.ඒ.ද මෙල් මාවත,කොළඹ - 04**

***முதலாவது மாடி, இல -14, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை,கொழும்பு – 04***

**1st Floor, No-14, R.A.De Mel Mawatha, Colombo – 04, Sri Lanka**

# பொருளடக்கம் 

**பக்க இலக்கம்**


| | | |
|---|---|---|
| **அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு** | | **57-73** |
| **1.1** | அறிமுகம் | **57** |
| **1.2.1** | தொலைநோக்கு | **57** |
| **1.2.2** | பணி | **57** |
| **1.2.3** | நோக்கங்கள் | **58** |
| **1.3** | பிரதான கடமைகள் | **58-59** |
| **1.4** | அலுவலகப் பதவியணியினர்கள் | **60** |
| **1.5** | பெற்றுக்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் பின்பற்றப்படும் நடவடிக்கை முறைகள் | **61-73** |
| **அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்** | | **74-84** |
| **2** | **புள்ளிவிபரப் பகுப்பாய்வு** | **74** |
| **2.1** | புள்ளிவிபரப் பகுப்பாய்வு | **75** |
| **2.2** | முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்ட விதம் | **76** |
| **2.3** | மாதாந்த பகுப்பாய்வு | **77** |
| **2.4** | ஆண்பால் பெண்பால் வகைப்பாடுத்தலின் கீழான பகுப்பாய்வு | **78** |
| **2.5** | மாவட்ட அடிப்படையில் பகுப்பாய்வு | **79** |
| **2.6** | விடய பகுப்பாய்வு | **80** |
| **2.7** | அமைச்சு / அரசாங்க நிறுவனங்களின் பகுப்பாய்வு | **81** |
| **2.8** | கடந்த 10 வருடங்களாக பெறப்பட்ட முறைப்பாடுகளின் பகுப்பாய்வு | **82** |
| அத்தியாயம் 03 | வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை | **83-88** |
| அத்தியாயம் 04 | செயலாற்றுகை சுட்டிகள் | **89** |
| அத்தியாயம் 05 | நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களை (SDG) அடைவதற்கான செயல்திறன் | **89** |
| அத்தியாயம் 06 | மனித வள விபர குறிப்பு | **90** |
| அத்தியாயம் 07 | இணக்க அறிக்கை | **91-100** |
| 8 | முடிவுரை | **101-102** |
| 9 | நன்றி தெரிவிப்பு கடிதங்கள் | **இணைப்பு** |

# அத்தியாயம் 01

# நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

## நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

## 2025 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை

### *1.1 அறிமுகம்*

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் 156 ஆவது உறுப்புரையானது நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தை (ஒம்புட்சுமான்) சட்ட பூர்வமாக தாபிப்பதற்கு இடமளித்திருந்தது. பாராளுமன்றமானது 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தை உருவாக்கி அலுவலகத்தை தாபித்து. 1981.03.02 ஆம் திகதியன்று அதன் அதிகாரங்களையும் கடமைகளையும் செயற்பாடுகளையும் விரிவான முறையில் வரையறுத்தது. அதனைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மற்றும் 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின் மூலமும் 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம் திருத்தப்பட்டது.

ஒம்புட்சுமான் அலுவலகம் 1981 ஆம் ஆண்டு கொழும்பு 04, காலி வீதி, இலக்கம் 222 என்னும் முகவரியினை கொண்ட கட்டடத்தில் தாபிக்கப்பட்டு அதன் பணிகளை ஆரம்பித்தது. அதன் பின்னர் இவ்வலுவலகம் கொழும்பு 03, காலி வீதி, இலக்கம் 594/3 என்னும் முகவரியினை கொண்ட கட்டடத்திற்கு இடமாற்றப்பட்டு 1989 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை தனது பணிகளை நிறைவேற்றியது. அதன்பின்னர் கொழும்பு 05, எளிபாங் வீதி, இலக்கம் 06 என்னும் இடத்திற்கு இடமாற்றப்பட்டு 2006 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை அவ்விடத்தில் செயல்பட்டு வந்தது. தற்போது ஒம்புட்சுமான் அலுவலகம் கொழும்பு 04, ஆர்.ஏ.டிமெல் மாவத்தையில் இலக்கம் 14 என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

### *1.2.1 தொலைநோக்கு*

அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அதனையொத்த ஏனைய நிறுவனங்கள் என்பவற்றில் சேவையாற்றும் அலுவலர்களால் இழைக்கப்பட்ட நிர்வாக அநீதிகளை ஒழிக்கும் பொருட்டு விசேடமாக நடுநிலமை, வெளிப்படைத் தன்மை என்பன ஒருங்கமைந்தவாறான பாதுகாப்பானதும், நீதியானதும் மற்றும் நேர்மையானதும் ஆன தீர்மானங்களை வழங்குவதனூடாக சிறந்த மக்கள் சேவையை உறுதிப்படுத்துவதற்கு சகல முயற்சிகளையும் எடுப்பதே எமது தொலைநோக்கமாகும்.

### *1.2.2 பணி*

அரசாங்க நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், நியதிச் சட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றில் பணிபுரியும் அலுவலர்களால் எடுக்கப்படும் தவறான நிர்வாக தீர்மானங்களால் ஏற்படும் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்ட முறைப்பாடுகளை பக்கசார்பின்றி புலனாய்வு செய்து அதன்பின்னர் அம்மீறல்களுக்கு பரிகாரமாக ஏற்புடையதான கட்டளைகள், தீர்மானங்கள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை வழங்குதல் ஆகும். நிர்வாக அநீதிகள் மற்றும் இலங்கை குடியரசின் அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல்கள் என்பன உள்ளடங்கலாக வேறுவகையான ஏனைய அநீதிகளும் மேலே கூறப்பட்ட மீறல்களுள் உள்ளடங்குவன ஆகும்.

### *1.2.3. நோக்கங்கள்*

அரசாங்கம், உள்ளூராட்சி மன்றங்கள், நியதிசட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்கள் எள்பவற்றில் பணிபுரியும் அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் தவறான நிர்வாக தீர்மானங்களினால் பொதுமக்களுக்கு ஏற்படும் அநீதியை சீர்திருத்தி, அரசாங்க நிர்வாகத்தை திறமையாகவும் பயனுறுதிவாய்ந்ததாகவும் நடாத்திசெல்வதற்கு ஏதுவான அரச பொறிமுறைக்கு உதவி, அத்துடன் தீர்மானங்களை நிறைவேற்றும் போது அவற்றை சரியாகவும் திறமையாகவும் அமுல்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுப்பதே எமது பிரதான நோக்கமாகும்.

### *1.3 பிரதான கடமைகள்*

பாராளுமன்றமானது, நிருவாத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்) அலுவலகத்தை தாபித்தல் வேண்டும் என இலங்கை குடியரசின் அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரை குறித்துரைக்கிறது. அரசாங்க அலுவலர்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள். உள்ளூராட்சி அதிகாரசபை மற்றும் அதேபோன்ற ஏனைய நிறுவனங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும் போது அவர்களால் மீறப்படும் அடிப்படை உரிமைகள் மீறல் அல்லது ஏனைய அநீதிகள் தொடர்பிலான முறைப்பாடுகளை அல்லது சார்த்துரைகளை புலனாய்வு செய்து அறிக்கையிட்டு அவ்வகையான மீறல்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவற்றுக்கு பரிகாரங்களை வழங்குதல் மற்றும்/அல்லது பொருத்தமான பரிந்துரைகளை வழங்குதல் என்பன இப்பதவிக்குரிய கடமைகளாகவுள்ளன.

அதற்கமைய 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம் உருவாக்கப்பட்டு ஒம்புட்சுமான் அலுவலகம் தாபிக்கப்பட்டது. அச்சட்டத்தில் ஒம்புட்சுமானின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் விபரிக்கப்பட்டு, வரையறுக்கப்படுள்ளன. அதனைத் தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து அடிப்படை உரிமைகள் மீறல்கள் அல்லது ஏனைய அநீதிகள் தொடர்பான முறைப்பாடுகளை நேரடியாக ஒம்புட்சுமானிடம் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதாக 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மேலே கூறப்பட்ட சட்டம் திருத்தப்பட்டது.

மனித உரிமை மீறல்கள், அநீதிகள், அநியாயங்கள் என்பவற்றைப் புலனாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் அத்துடன் முறையீட்டுக்கு உள்ளான அரசாங்க அலுவலரின் தீர்மானம், பரிந்துரை, செயற்பாடு அல்லது தவிர்ப்பு சட்டத்திற்கு எதிரானதா, அநீதியானதா, அடக்கு முறையானதா அல்லது பாகுபாடானதா அல்லது முறையற்ற தற்றுணிவு பிரயோகமா என தீர்மானிப்பதற்கு ஒம்புட்சுமான் பணிக்கப்படுகிறார். அரசாங்க அலுவலரொருவரால் ஒரு நபரின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது என அல்லது அத்தகைய அலுவலரினால் அநீதி ஏற்பட்டுள்ளது என புலனாய்வின் பின்னர் ஒம்புட்சுமான் திருப்தியடையுமிடத்து, அவர் தீர்மானம் எடுத்து அதற்கமைய நிவாரணம் வழங்குவார். ஒம்புட்சுமான் பாதிக்கப்பட்ட நபருக்கு நிவாரணம் வழங்கும் வகையில் சம்பந்தப்பட்ட அரசாங்க அலுவலரின் செயற்பாட்டை மீள்பரிசீலனை செய்வதற்கும், சீர்படுத்துவதற்கும், இரத்துசெய்வதற்கும் அல்லது மாற்றுவதற்கும் பரிந்துரை வழங்கலாம். அத்துடன் அரசாங்க அலுவலர் சார்பாக நிறுவன தலைவரிடம் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பரிந்துரை அமுலுக்கு வரும்வகையில் அவரினால் முன்மொழியப்படும் படிமுறைகளை அறிவிக்குமாறு கோரலாம்.

இறுதியாக, அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பளித்தல், அரசாங்க மற்றும் அதையொத்த ஏனைய நிறுவனங்களில் உள்ள அலுவலர்களின் செயற்பாடுகள் மூலம் ஏற்படும் ஏனைய அநீதிகளிலிருந்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பன ஒம்புட்சுமானின் உயர்ந்த கடமையாக உள்ளது என்பது தெளிவாகிறது. மக்களுடைய உரிமைகளை பாதுகாக்கும் அதேவேளை அரசியலமைப்பின் உறுப்புரைகளில் மற்றும் சட்டவாக்கத்தை சட்டமாக்கும் ஏற்பாடுகள் மற்றும் அதனுடைய ஒழுங்கு விதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளினால் வெளியிடப்படும் பல்வேறுவகையான சுற்றறிக்கைகளில் உள்ளடக்கிய விதிகள் தொடர்பான விடயங்கள் சார்பாகவும் அரசாங்கத்தின் நிர்வாக கொள்கை முறையாக அமுல்படுத்தப்படுகிறதா என உறுதிப்படுத்தல் ஒம்புட்சுமானின் கடமையாகும்.

## முறைப்பாடுகள் பெற்றுக்கொண்ட பின்னர் பின்பற்றப்படும் நடைமுறைகளின் பல்வேறு வகையான நிலைகள்

Parliamentary Commissioner for Administration (OMBUDSMAN)

පරිපාලන කටයුතු පිළිබඳ පාර්ලිමේන්තු කොමසාරිස් (ඔම්බුඩ්ස්මන්) කාර්යාලය
***நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் (ஒம்புட்ஸ்மன்)***
**OFFICE OF THE PARLIAMENTARY COMMISSIONER FOR ADMINISTRATION (OMBUDSMAN)**

முறைப்பாடுகள் / மனுகள்

- பதிவு தபால் மூலம்
- சாதாரண தபால் மூலம்
- மின் அஞ்சல் மூலம்
- நேரடியாக கையளித்தல்

→ நிர்வாக அலுவலர்

நாளாந்தம் கடிதங்கள் பிரிக்கப்பட்டு, முறைப்பாடுகளுக்கு திகதி முத்திரையிடப்படுகிறது.

→ பிரதான முகாமை சேவை அலுவலர்

- பெறப்படுகின்ற முறைப்பாடுகளின் விடயங்களை முறைப்பாட்டு பதிவேட்டில் பதிதல்.
- விடய வகைப்படுத்தலுக்கு அமைய ஏற்புடைய அலுவலருக்கு முறைப்பாட்டை ஒதுக்கல்

→ விடய முகாமை அலுவலர்

→ நிர்வாக அலுவலர்

- முறைப்பாடுகளை பெற்றுக்கொண்ட சம்பந்தப்பட்ட அலுவலர்களால் கோவைகள் தயாரிக்கப்படுகின்றன.
- கோவை தயாரிக்கப்பட்டவுடன் விடய எழுதுநர் ஒம்புட்சுமானிடம் கலந்துரையாடி ஆலோசனை மற்றும் அறிவுறுத்தலை பெற்றுக்கொள்வதுடன் அதன் பிறகு மேற்கொள்ளவேண்டிய அவசியமான நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பித்தல்.

→ நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்)

- பெற்றுக்கொள்ளப்படுகின்ற சகல முறைப்பாடுகள் தொடர்பில் ஒம்புட்சுமானிடமிருந்து அறிவுறுத்தலை பெற்றுக்கொள்ளுதல்.
- நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு அனுப்பப்படும் முறைப்பாடுகளில் / மனுக்களில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் அதிகார எல்லையினுள் உள்ளடங்குகின்றதா என ஒம்புட்சுமான் மிகவும் கவனமாக ஆராய்வார். அவ்வாறு அச்சட்டத்தின் அதிகார எல்லையினுள் உள்ளடங்காத முறைப்பாடுகள், நிராகரிக்கப்படுவதற்கான காரணங்கள் குறிப்பிட்டு நிராகரிக்கப்படும்.
- முறைப்பாட்டில் போதுமான தகவல்களை வழங்காதவிடத்து ஒம்புட்சுமானின் வழிகாட்டலின் கீழ் முறைப்பாட்டாளரிடமிருந்து தேவையான தகவல்கள் பெறப்படும் (ஓஎம்பி படிவம் -1 ஐ அனுப்புவதன் மூலம்)
- நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்ட அதிகார எல்லையினுள் உள்ளடங்குகின்ற முறைப்பாடுகள் பதியப்பட்டு முறைப்பாடு தொடர்பில் விரிவான அறிக்கையொன்றை அனுப்புமாறு பிரதிவாதியாக உள்ள அலுவலருக்கு அனுப்புவதுடன் அதன் பிரதியொன்று முறைப்பாட்டாளருக்கு அனுப்பப்படும்.
- பெறப்படும் அறிக்கைக்கு அமைய, முறைப்பாட்டுக்கு நிவாரணம் வழங்க கூடிய சாத்தியம் காணப்படுமாயின் அத்தகைய நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

### *1.4 அலுவலகப் பதவியணியினர்கள்*

இவ்வலுவலகம் 32 பதவியணியினர்களை அங்கீகரித்துள்ளது. ஆயினும் நிறுவன அமைப்பு வரைபடம் காட்டுவது போல் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வலுவலகத்தில் 19 அலுவலர்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளனர். இவ்வலுவலகத்தில் பதவியணியினர் பற்றாக்குறையால் பணி செயற்பாடுகள் தாமதமடைவது அவதானிக்கப்படுகிறது. ( வரைபடத்தை பார்க்கவும்)

## நிறுவன அமைப்பு வரைபடம்



### *1.5 பெற்றுக்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் பின்பற்றப்படும் நடவடிக்கை முறைகள்*

இவ்வலுவலகத்தால் பெறப்படும் ஒவ்வொரு முறைப்பாடும் ஓர் தனி பதிவேட்டில் பதியப்படுகிறது. ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் விசேட இலக்கம் வழங்கப்படுகிறது. அதன் பின்னர் முறைப்பாடுகள் ஓய்வூதியம், விதவைகள் அநாதைகள், சம்பள முரண்பாடுகள், சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள், காணி, அதிகாரமளிக்கப்படாத நிர்மாணங்கள் ,சேவை முடிவுறுத்தல், பதவியில் மீளஅமர்த்தல், பல்கலைக்கழக / பாடசாலை அனுமதி, அதிகார துஷ்பிரயோகம் என்பன போன்ற விடயங்களுக்கு அமைய வகுக்கப்படுகின்றன. அவை குறிப்பிட்ட விடயங்களாக ஒதுக்கப்பட்டு இவ்வலுவலகத்தின் அலுவலர்களால் நிர்வாகிக்கப்படுகிறன. அவ்வலுவலர்கள் அரசாங்கசேவையின் “முகாமை சேவை அலுவலர்” வகுதியினரை சேர்ந்தவர்களாகும். முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டதும் அம்முறைபாடு ஏற்புடைய முகாமை சேவை அலுவலருக்கு (விடய எழுதுநர்) அனுப்பப்படும். அதன்பின்னர் அவர்கள் ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் ஒரு கோவையை திறப்பார்கள். விடய தலைப்பு தெரிவானது அலுவலகத்தின் பிரதம முகாமை சேவை அலுவலரால் மேற்கொள்ளப்படுகிறது.

குறிப்பிட்ட முறைபாடு தொடர்பில் கோவை திறக்கப்பட்டதும் முறைபாட்டில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை எழுதுநர் சுருக்கமாக குறிப்பு எழுதுவார். அதன்பின்னர் அவர் நிர்வாக அலுவலருடன் முறைப்பாடு தொடர்பான தன்மையை பற்றிக் கலந்துரையாடி, விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் அல்லது தேவையான சந்தர்ப்பங்களில் அவர்கள் இருவரும் ஒம்புட்சுமானை சந்தித்து முறைப்பாடு தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பாக அவருடைய ஆலோசனையையும் உதவியையும் பெற்றுக்கொள்வார்கள்.

மிகவும் முக்கியமான கலந்துரையாடல் ஒன்று நடைபெறும். அக்கலந்துரையாடலில் இணைக்கப்பட்ட ஏனைய ஆவணங்களுடன் பெறப்பட்ட முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட்ட விடயத்தை ஒம்புட்சுமான் கவனமாக ஆராய்வார். மிகவும் முக்கியமான விடயமாக முறைபாடு / சார்த்துதல் ஒம்புட்சுமானின் நியாயாதிக்கத்திற்குள் அமைந்துள்ளதா என உறுதிப்படுத்துவதன் பொருட்டு ஆராயப்படும். இப்பிரச்சனை பற்றி தீர்மானிக்கும் போது நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் ( இதன்பின்னர் சட்டம் என குறித்துரைக்கப்படும்) பிரிவுகள் 10, 11, மற்றும் 17 இல் காணப்படும் விடயங்களை ஒம்புட்சுமான் கவனத்தில் கொள்வார். இம்முறைப்பாடு சட்டத்தின் எல்லைக்குள் இல்லாவிட்டால் இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாமைக்கான காரணங்களை உள்ளடக்கி முறைபாட்டாளருக்கு உடனடியாக தெரியப்படுத்தப்படும்.

இம்மனு தொடர்பாக நடவடிக்கை தொடர்வதற்கு ஒம்புட்சுமான் தீர்மானிக்கும் போது ஒவ்வொரு முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய படிமுறைகள் சார்பாக பொருத்தமான ஒழுங்குகளை மேற்கொள்ளுவார். முறைப்பாட்டாளரினால் கோரப்படும் நிவாரணம் மற்றும் யாருக்கு எதிராக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது போன்ற மேலதிக தகவல்களை பெறுவது அவசியம் என ஒம்புட்சுமான் கருதுவாரானால், அவ்வகையான தகவல் மனுதாரரிடமிருந்து கோரப்படும். அதன்பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தாமதமின்றி இவ்வழக்கை முடிவுறுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது எனினும் இம்முயற்சி முறைப்பாட்டின் இயல்பில் தங்கியுள்ளது.

பொதுவாக இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டதும் எவ்வலுவலர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதோ அவ் அலுவலர்களை விட உயர் பதவியில் உள்ள அலுவலர்களிடமிருந்து கருத்தறிவிப்பு கோரப்படுகிறது. கருத்தறிவிப்பு அனுப்பப்பட்டதும் அதற்கு அவ்வதிகாரிகள் நிவாரணம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ள சந்தர்ப்பங்களும் உண்டு. மாறாக சில சந்தர்ப்பங்களில் கருத்தறிவிப்பை பெற்றுக்கொள்வதற்கு பல நினைவூட்டல் கடிதங்கள்

அனுப்பவேண்டியிருந்தது. சில சந்தர்ப்பங்களில் ஒம்புட்சுமான் பல நினைவூட்டல் கடிதங்ளை அனுப்பியதன் பின்னரே சுமாரான எண்ணிக்கையிலான முறைப்பாடுகளுக்கு அர்த்தமுள்ள விளைவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சிலவேளை சாதாரண நடைமுறைகளூடாக ஒம்புட்சுமானால்

நியாயமான தீர்மானத்தை எட்ட முடியாதுள்ள சந்தர்ப்பத்தில் குழுக்கள் இவ்வலுவலகத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு குழுக்களும் தமது வாதங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கி இயற்கை நீதியின் விதிகளை அவதானித்து விசாரணை நடாத்தப்படுகிறது. அடிப்படை உரிமை மீறல் அல்லது அநீதி ஏற்பட்டுள்ளது என நிரூபிக்கும் போதெல்லாம், ஒம்புட்சுமான் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்குவதற்கு முயற்சி செய்வார். அந்நடவடிக்கையின் மூலம் நியாயமான தீர்மானமொன்றை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் அவ்விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும். ஒம்புட்சுமான் தனது சகல முயற்சிகளிலும் தீர்வு காண முடியாதுபோனால், அவர் அப்பிரச்சனை தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொண்டு குறித்த காலப்பகுதிக்குள் அத்தீர்மானத்தை அமுல்படுத்துமாறு பிரதிவாதிக்கு அறிவிப்பார்.

அக்குறித்த காலத்தினுள் எந்நடவடிக்கையும் மேற்கொள்ளாவிடின் ஒம்புட்சுமான் தனது அறிக்கையின் பிரதியொன்றை சனாதிபதிக்கு அனுப்புவதுடன் பாராளுமன்றத்திற்கும் பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு அனுப்பப்படும். ஒம்புட்சுமான் அலுவலகம் இதன்முன்னர் குறித்துரைத்த செயற்பாட்டை பின்பற்றுவதில் உறுதி கொண்டுள்ளது.

மேலே கூறப்பட்ட முறையில் மனுக்கள் தொடர்பிலான நடைமுறைகளை மேற்கொண்டு அதன்பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒம்புட்சுமானின் தலையீட்டை நாடிய விண்ணப்பதார்களுக்கான நிவாரணங்கள் இவ்வலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது தொடர்பில் வேறுபட்ட பகுதிகளை உள்ளடக்கிய சில விடயங்களை தற்போது குறித்துரைப்பதன் மூலம் இவ்வலுவலகத்திற்கு முன்வைக்கப்படும் மனுக்களின் சரியான இயல்பு மற்றும் வகைகள் தொடர்பிலான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

**இல : OMB/P/2/1/693/2024** **திரு. டபிள்யூ.பி.பிரசன்ன**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள ஹ/விஹாரகல 550 மகா வித்தியாலயத்தின் அதிபர் திரு. டபிள்யூ.பி.பிரசன்ன அவர்களால் 2024.11.18 ஆம் திகதியன்று இந்த அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட முறைப்பாட்டில், ஹ/விஹாரகல 550 மகா வித்தியாலயத்தின் கிழக்கு எல்லையில் ஒரு எல்லைப் பிரச்சினை எழுந்துள்ளது என்றும், அந்த எல்லையிலிருந்து ஒரு நுழைவுவீதி உள்ள பகுதி இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமானதாக இருப்பதால், 30 ஆண்டுகளாகத் தொடரும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை பெற்றுத்தருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தப் பிரச்சினை தொடர்பாக இலங்கை மகாவலி அதிகாரசபையிடமிருந்து ஒரு அறிக்கை கோரப்பட்டது. 2025.02.17 ஆம் திகதிய மகாவலி அதிகாரசபையின் வலவ குடியிருப்பு வணிக முகாமையாளர் எமக்கும் பிரதியிட்டு, பணிப்பாளர் (காணி) அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளபடி, சம்பந்தப்பட்ட கணியின் ஊடாக 12 அடி நுழைவுப் பாதை கம்பி அடித்து ஒதுக்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பாடசாலைக்கு தேவையானவாறு மதிலொன்றும் நுழைவாயல் ஒன்றும் நிர்மாணிப்பதற்கு தேவையான ஆவணங்கள் விடுவிக்கப்பட்டள்ளதாக 2025.02.17 ஆம் திகதிய அறிக்கைமூலம் இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டள்ளது. சுமார் 20 ஆண்டுகளாகத் தொடர் கடிதப் பரிமாற்றங்கள் இடம்பெற்றபோதிலும் தீர்க்கப்படாத இந்தப் பிரச்சினை, முறைப்பாடு செய்யப்பட்டு 03 மாதக் குறுகிய காலத்திற்குள் தீர்த்துவைக்க இந்த அலுவலகத்தின் தலையீட்டினால் முடியுமாக இருந்தது.

காலி மாவட்டத்தின் கோனபினுவல பிரதேச செயலகப் பிரிவின், கோனபினுவல, பத்தேகம வீதி, “கதிராலி” எனும் முகவரியில் வசிக்கும் திருமதி. டபிள்யூ.டி.சி. சந்திமாலி, 2024.02.14 அன்று இவ்வலுவலகத்திற்கு ஒரு முறைப்பாட்டைச் சமர்ப்பித்துள்ளார். அந்த முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளதாவது, முறைப்பாட்டாளரின் வீடு அமைந்துள்ள காணியின் எல்லையில் கட்டப்பட்ட மூன்று மாடிக் கட்டிடத்தின் ஒரு சுவர் எல்லை வரை கட்டப்பட்டுள்ளது என்றும், தரைத்தளத்தைத் தவிர மற்ற இரண்டு மாடிகளின் எல்லைச் சுவரில் ஜன்னல்களும் கதவுகளும் வைக்கப்பட்டுள்ளன என்றும், தண்ணீர் குழாய்கள் முறைப்பாட்டாளரின் காணியிலிருந்து பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த எல்லைச் சுவர் ஒரு மறைப்புச் சுவராக (blind wall) கட்டப்படாததால், அது அவர்களது இரகசியத்தன்மையை பாதிப்பதாக இருப்பதால் இதுதொடர்பில் அம்பலங்கொட பிரதேச சபைக்கு பலமுறை முறைப்பாடுகள் அளிக்கப்பட்ட போதிலும், இப்பிரச்சினையைத் தீர்க்க எந்த தீர்வும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டள்ளது. இப்பிரச்சினை தொடர்பில் பிரதேச சபையின் செயலாளரிடமிருந்து 2024.03.22 ஆம் திகதியன்று ஒர் அறிக்கை கோரப்பட்டது. உரிய இடத்தை அம்பலங்கொட பிரதேச சபையின் தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் மூலம் சோதனைசெய்து, தொடர்புடைய நிர்மாணம் மற்றும் மறைப்புச்சுவருக்கு பயன்படுத்திய ஜன்னல்கள் மற்றும் நீர்குழாய்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து எமக்கு அனுப்பப்பட்ட 2024.04.09 ஆம் திகதிய அறிக்கைமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், 3 மாத காலமாக அந்த பிரச்சினை தீர்க்கப்படவில்லை என முறைப்பாட்டாளினால் தெரிவிக்கப்பட்டதோடு, மீண்டும் இரு தரப்பினரையும் வரவழைத்து, உடன்பாட்டவாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று 2025.03.12 ஆம் திகதிய கடிதம் மூலம் பிரதேச சபையின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. எமது நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்து சுமார் ஒரு வருடம் கழித்துள்ளமையினால் நாங்கள் மீண்டும் விசாரித்ததோடு 2025.04.10 ஆம் திகதிய கடிதத்தின்மூலம் பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டிருப்பது யாதெனில் கட்டட ஒப்பந்தக்காரர் கட்டிடத்தின் எல்லைச்சுவரில் உள்ள ஜன்னல்களை மூடிவிட்டதாகவும், முறைப்பாட்டாளரின் காணியிலிருந்து வரும் தண்ணீர்க் குழாயும் அகற்றப்பட்டுவிட்டதாகவும் என்பதாகும். அதன்படி எமது தலையீட்டால், சம்பந்தப்பட்ட சிக்கலான நிலைமை தீர்க்கப்பட்டது என்பதோடு முறைப்பாட்டாளரான திருமதி டபிள்யூ.டி.சி. சந்திமாலியின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**இல: OMB/P/2/2/4088/2023** **திரு. டபிள்யூ.எம். பியதாச**

தெமோதர, கவராவெல, பத்தேவெல, அம்பாகஹபத்தன எனும் முகவரியில் வசிக்கும் திரு. டபிள்யூ.எம்., பியதாச என்பவரால் அவரது காணியில் 03 பேர்சஸ்களை அருகிலுள்ள காணி உரிமையாளர் கைப்பற்றி இருப்பதாகவும், இந்த எல்லைப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு கிராம அலுவலர் மற்றும் காணி அலுவலரிடம் கோரியிருந்தும், எந்த நிவாரணமும் கிடைக்காததால், தனது பிரச்சினையை 2023.10.03 ஆம் திகதியன்று இந்த அலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பாக, இந்த அலுவலகத்தினால் எல்ல பிரதேச செயலாளரிடமிருந்து 2023.10.31 ஆம் திகதியன்று அறிக்கையொன்று கோரப்பட்டதோடு, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட தகவல்களையும் கேட்டுள்ளது.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, 2023.12.22 ஆம் திகதி எல்ல பிரதேச செயலாளரினால் அறிக்கையொன்று அனுப்பிவைக்கப்பட்டு, பது/பிர 20073 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் உரிமையாளரான டபிள்யூ.எம். பியதாச மற்றும் பது/பிர 20098ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமையாளரான டபிள்யூ.எம். பேபிசிங்கோ ஆகியோருக்கு இடையே எல்லைகள் தொடர்பாக தொடர்ச்சியான தகராறுகள் நிலவுவதால், குறிப்பிட்ட இடத்தை காணி திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ், நிலஅளவை செய்து ஒதுக்கீடு செய்வதற்கும் தேவையான ஆவணங்களைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதாகும் . அதன் விளைவாக, 2025.12.09 ஆம் திகதியன்று, திரு. டபிள்யூ.எம்.

பியதாச அவர்கள், தாம் இழந்த 03 பேர்ச்வஸ் காணி தமக்கு கிடைத்ததாகவும் அதபோல் தமது அளிப்புப் பத்திரத்திற்கு தமக்குச் சேர வேண்டிய 36 பேர்ச்சஸ் காணியும் தனக்கு பிணக்கின்றி கிடைத்தது இந்த அலுவலகத்தின் தலையீட்டின் மூலமே என பாராட்டுடன் தெரிவித்துள்ளார்.

அதன் ஒரு பிரதி முறைப்பாட்டாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததால், முறைப்பாட்டாளரான திரு. டபிள்யூ.டபிள்யூ. பியதாச, 2024.01.10 ஆம் திகதி அன்று மீண்டும் கடிதம் மூலம் முறைப்பாட்டாளரால் 1992 முதல் பயிர் செய்யப்பட்டு வரும் 64 பேர்ச் நிலத்தைப் பெற்றுத்தருமாறு எழுதியுள்ளார். அதன்படி, 2024.01.30 ஆம் திகதி அன்று எல்லா பிரதேச செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டு, உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 36 பேர்ச் நிலத்திற்குக் மேலதிகமாக முறைப்பாட்டாளர் வசம் உள்ள மற்றொரு நிலத்துண்டு தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து விசாரணைசெய்யப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் விதமாக, 2024.05.07 அன்று எல்ல பிரதேச செயலாளர், அவர் அனுபவித்துவரும் கொடைப் பத்திரத்திற்குக் மேலதிகமாக, உரித்து ஆவணம் இல்லாத ஒரு அரசாங்க நிலத்துண்டை அடையாளம் காணமுடியவில்லை என்றும், உரிமப் பத்திரத்தில் காணிப்பகுதி திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் அளவீடு செய்த பின்னர் அது ஒரு அரசாங்க நிலத்துண்டு என அடையாளம் காணப்பட்டால், இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டாளருக்குத் இது குறித்து 2024.05.30 அன்று கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதோடு, உரிய ஆவணங்களைச் பிரதேச செயலாளருக்குக் சமர்ப்பித்து, அதன் முன்னேற்றம் குறித்து எங்களுக்குத் தெரிவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

அதன்படி, முறைப்பாட்டாளர் 2024.06.13 ஆம் திகதியன்று இந்த அலுவலகத்திற்கு ஒரு கடிதம் அனுப்பி சம்பந்தப்பட்ட காணி நீதிமன்ற உத்தரவுகளின்படி நில அளவை அலுவலகம் மற்றும் நீதிமன்ற நிலஅளவையாளரர்களால் நில அளவை செய்யப்பட்டுள்ள வரைபடமிடல் இருக்கும்போது மீண்டும் நிலஅளவை தேவையென காணி அலுவலரால் தமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். எனினும் தான் வலதுகுறைந்த, வயதான நபராக இருப்பதாலும் அதற்காக செலவு செய்வதற்கு தம்மிடம் பணம் இல்லையென்பதால் தமது காணிப்பிரச்சினையை தீர்த்துத்தருமாறும் கோரியுள்ளார்.

இது தொடர்பாக, அரச நிலங்களை அளவீடு செய்த பின்னர் அரச நிலத்தின் ஒரு பகுதி அடையாளம் காணப்பட்டால், இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச செயலாளர் 2024.07.10 அன்று தெரிவித்துள்ளார். அதன்படி, இந்த நிலப்பகுதி நீதிமன்ற உத்தரவின் பேரில் அளவீடு செய்யப்பட்டுள்ளதால், மீள் நிலஅளவீடு தேவைப்படுகிறது என்றும், இந்த அளவீட்டை பிரதேச செயலகம் மூலம் மேற்கொள்ள வாய்ப்பு உள்ளதா என மீண்டும் பிரதேச செயலாளரிடமிருந்து 2024.07.18 அன்று வினவப்பட்டுள்ளதோடு பலமுறை நினைவூட்டல்கள் செய்யப்பட்டன. அளவீட்டுக் கோரிக்கை 2024.09.18 அன்று அனுப்பப்பட்டிருந்த போதிலும், அதுவும் தாமதமானதால், 2025.03.12 அன்று பதுளை சிரேஷ்ட நில அளவையாளரிடம் அதுபற்றி விசாரிக்கப்பட்டது. இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட அளவீட்டுப் பணி 2025.09.11 அன்று முடிக்கப்படும் என்று சிரேஷ்ட நில அளவையாளர் 2025.08.21 அன்று தெரிவித்துள்ளார்.

பின்னர் 2025.11.17 ஆம் அன்று, எல்ல பிரதேச செயலகம் இந்த அலுவலகத்திற்கும் ஒரு பிரதியுடன் திரு. டபிள்யூ. டபிள்யூ. பியதாசவுக்கு. சம்பந்தப்பட்ட நில அளவைப் படம் மற்றும் துண்டாடல் விபரத்தின் பிரதியொன்றை பதுளை சிரேஷ்ட நில அளவையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டாளரான திரு. டபிள்யூ. டபிள்யூ. பியதாசவுக்கும் அது குறித்து தெரிவித்து 2025.11.17 அன்று ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

இந்த நடவடிக்கையின் விளைவாக, திரு. டபிள்யூ. எம். பியதாச அவர்கள், இந்த அலுவலகத்தின் தலையீட்டின் மூலம், அவர் இழந்திருந்த 03 பேர்ச்சஸ் நிலமும், தமது அளிப்புப் பத்திரத்திற்கு உரித்தாக வழங்கப்பட வேண்டிய 36 பேர்ச்சஸ் நிலமும் 2025.12.09 அன்று வழங்கப்பட்டதாக நன்றியுடன் தெரிவித்துள்ளார்.

**இல: OMB/P/2/2/4310/2025** **திருமதி ஏ.எஸ்.ஆர்.சுதர்ம**

இராஜகிரிய, ஒபேசேகரபுர, நாணாயக்கார மாவத்தை, இல. 162-இல் வசிக்கும் திருமதி சுதர்ம ஷில்பகே ரூபன் சுதர்ம மனேல் அவர்கள், தனது தந்தைக்குச் சொந்தமான சொத்துக்களின் உரிமையை ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டை மாநகர சபை தனக்கு வழங்குவதில் தாமதம் செய்வதாகவும், எனவே இது தொடர்பாக நீதி வழங்குமாறும் 2025.01.08 அன்று இந்த அலுவலகத்திற்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, இந்த அலுவலகத்தினால் ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டை மாநகர சபையிடம் 2025.10.24 வினவப்பட்டபோது நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த அவரது நில உரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டதாக, திருமதி சுதர்ம ஷில்பகே ரூபன் சுதர்ம மனேல் அவர்களினால் 2025.12.02 ஆம் திகதியன்று நன்றியுடன் அறிவித்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**இல: OMB /P/2/4/5722/2025** **செல்வி எஸ். ஜெயமி சஞ்சனா டி சில்வா**

மீகம, ரிட்டிக்கட்டிய புதிய காலனி, இல. 92-இல் வசிக்கும் செல்வி எஸ். ஜெயமி சஞ்சனா டி சில்வா, அவர்களினால் 2025.04.02 ஆம் திகதியன்று அனுப்பட்ட முறைப்பாட்டில் தெரிவித்திருப்பதாக முறைப்பாட்டாளர் களனிப் பல்கலைக்கழக ராகம மருத்துவ பீடத்தின் மாற்றுத்திறனாளிகள் கற்கைத் துறையின் மாணவி என்றும், இந்த மனுவின் மூலம் பல்கலைக்கழகத்தால் விண்ணப்பதாரிக்கு இழைக்கப்பட்ட அநீதி (மன உளைச்சல்) குறித்தும் முறைப்பாடு செய்துள்ளதோடு இறுதி ஆண்டு கற்கை நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கவும், விடைத்தாள்களை வெளியக மேற்பார்வையாளரின் கீழ் மீள்மதிப்பீடு செய்யவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரி, ஒரு முறைப்பாட்டை என்னிடம் அளித்துள்ளார்.

அதன்படி, நான் களனிப் பல்கலைக்கழகத்தின் ராகம மருத்துவ பீடத்தின் மாற்றுத்திறனாளிகள் கற்கை துறைத் தலைவரிடம் இதுகுறித்து விசாரித்தேன். அந்த விசாரணைக்குப் பிறகு, 2025.06.30 ஆம் திகதிய அறிக்கை எனக்கு அனுப்பப்பட்டிருந்தபோதிலும், முறைப்பாட்டுக்கு உரிய கவனம் செலுத்தாமல் நீண்ட மற்றும் கோரப்படாத பதில் அளிக்கப்பட்டதன் காரணமாக, முறைப்பாட்டாளரின் வினாத்தாள்கள் சுயாதீன (வெளிவாரி) பரீட்சகர்களால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டனவா? அந்தப் பரீட்சகர்களை யார் நியமித்தனர்? மேலும் அவர்கள் வெளிவாரி பரீட்சகர்களா ? என்று நேரடிக் கேள்வி எழுப்பி, தெளிவான மற்றும் சுருக்கமான பதிலை அனுப்புமாறு ராகம மருத்துவ பீடத்தின் மாற்றுத்திறனாளிகள் ஆய்வுப் பிரிவின் தலைவர் பெயரிலான 16.07.2025 திகதிய கடிதம் மூலம் மீண்டும் அறிவுறுத்தப்பட்டது. களனி பல்கலைக்கழகம், ராகம மருத்துவ பீடத்தின் பீடாதிபதி அவர்கள், இந்தப் முறைப்பாடு தொடர்பான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு அவருக்கு 11.07.2025 அன்று மின்னஞ்சல் வாயிலாக ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். மேலும், இவ்விஷயத்தில் மூன்றாம் தரப்பினர் தலையிட உரிமை இல்லை என்றும், மாற்றுத்திறனாளிகள் ஆய்வுப் பிரிவின் தலைவரிடமிருந்து தெளிவான, சுருக்கமான பதில் ஒன்றை அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் 21.07.2025 திகதியிட்ட கடிதம் ஒன்றில் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, 2025.07.24 அன்று, மாற்றுத்திறனாளிகள் கற்கைத் துறையின தலைவர் நான் கேட்ட கேள்விக்கு ஒரு பதில் அனுப்பியிருந்ததோடு அந்தப் பதிலில், முறைப்பாட்டாளரின் வினாத்தாள்கள் சுயாதீன (வெளிவாரி) பரீட்சகரினால் மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்ததால், இது தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து 2025.08.05 ஆம் திகதியிட்ட கடிதம் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் வினவப்பட்டது. இருப்பினும், அதற்குப் கிடைக்கபெறவில்லை என்பதோடு, 2025.09.08 அன்று முதல் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டிருந்தும், அதற்கும் ஒரு மாதத்திற்கும் மேலாகியும் எதிர்பார்க்கப்பட்ட பதில் கிடைக்காததால், 2025.10.30 அன்று அறிக்கையுடன் நேரில் ஆஜராகுமாறு பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவருக்கு அழைப்பாணை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த முடிவு அறிவிக்கப்பட்ட பிறகு, பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர், 30.10.2025-க்கு முன்னர் தொடர்புடைய அறிக்கை எனக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தார். மேலும்,

பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவரால் எழுதப்பட்ட, இல. UGC/CH/7/1/4 மற்றும் 15.10.2025 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம், முறைப்பாட்டாளரின் வினாத்தாள்களை மூன்று சுயாதீன வெளிவாரி பரீட்சகர்களை மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மீள்மதிப்பீடு செய்துள்ளதாகவும், அவர்கள் தங்கள் பரிந்துரைகளை பல்கலைக்கழக மானியக் குழுவிடம் சமர்ப்பித்த பிறகு, குழுவின் பரிந்துரையானது, இல. UGC/AC/10/kln-I iy மற்றும் 2025.09.22 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் முறைப்பாட்டாளருக்கு அனுப்பப்பட்டதாகவும் எனக்குத் தெரிவித்தார்.

அதன்படி, எங்களின் தலையீட்டிற்குப் பிறகு, இறுதி ஆண்டுப் படிப்பைத் தொடர்வதற்காகவும், ஒரு வெளிவாரி மேற்பார்வையாளரின் கீழ் விடைத்தாள்களை மறுபரிசோதனை செய்ய வேண்டும் என்ற முறைப்பாட்டாளரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

**இல: OMB /P/2/4/5490/2023** **திருமதி எம்.ஜி. ஸ்ரீயானி.**

வலஸ்முல்லா, வலயம் 02, விவசாய உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் பொருளாதார உதவியாளராகப் பணிபுரியும் திருமதி. எம்.ஜி. ஸ்ரீயானி, 15.06.2023 அன்று என்னிடம் ஒரு முறைப்பாட்டை சமர்ப்பித்து அதில், பட்டதாரி பயிற்சியாளர்களுக்கு நிரந்தரப் பதவிகளை வழங்கி, தென் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு மூலம் தென் மாகாணப் பொதுச் சேவையில் தென் மாகாண விவசாயத் திணைக்களத்தில் பொருளாதார உதவியாளர் பதவிக்கு ஆணைக்குழுவால் 17.02.1997 முதல் தான் ஆட்சேர்க்கப்பட்டதாகவும், அவ்வாறு நியமிக்கப்பட்ட நாளிலிருந்து MN - 6 சம்பளக் குறியீட்டின்படி சம்பளம் வழங்கப்பட்டு வருவதாகவும், ஆனால் முறைப்பாட்டாளரின் சம்பளம் பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 03/2016-க்கு ஏற்ப இன்னும் மாற்றப்படவில்லை என்றும், எனவே, அந்தச் சுற்றறிக்கையின்படி சம்பளம் சீர்செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, தென் மாகாண விவசாயத் திணைக்களத்தின் விவசாயப் பணிப்பாளரிடமிருந்து ஒரு அறிக்கை கோரப்பட்டது. தெற்கு மாகாண விவசாயப் பணிப்பாளரின். SP/DOA/1/2/2/352 ஆம் இலக்க மற்றும் 2023.08.10 ஆம் திகதிய அறிக்கையில், தெற்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரது B/2/5/1 ஆம் இலக்க மற்றும் 2023.05.31 ஆம் திகதிய கடிதம் மூலம், பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 MN - 06/2016-இன் படி முறைப்பாட்டாளரின் சம்பளத்தை திருத்தியமைக்க பரிந்துரைத்து, மாண்புமிகு ஆளுநரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. இது குறித்து 2023.08.18 அன்று, அந்த அறிக்கையின் பிரதியுடன் முறைப்பாட்டாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், முறைப்பாட்டாளர் தனது பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை என்று கூறி 2024.10.30 அன்று எனக்கு மீண்டும் ஒரு கடிதம் அனுப்பினார். அதன்படி, தெற்கு மாகாண விவசாயப் பணிப்பாளரினால் 2024.11.22 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் இப்பிரச்சினை குறித்த ஒரு முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மீண்டும் கேட்டுக்கொள்ளப்பட்டார். இதற்குப் பதிலளிக்கும் விதமாக, SP/DOA/1/2/2/352 ஆம் இலக்க மற்றும் 2024.12.10 ஆம் திகதியிட்ட கடிதம் மூலம், முறைப்பாட்டாளருக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளக் குறியீடு குறித்து எந்தத் தெளிவான பரிந்துரையும் செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினை குறித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து 2024.12.23 அன்று ஒரு அறிக்கையும், 2025.04.28 அன்றும் ஒரு முன்னேற்ற அறிக்கை கோர முடிவு செய்யப்பட்டது. அதன்படி, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/SP/0309 ஆம் இலக்க மற்றும் 2025.01.31 ஆம் திகதியிட்ட கடிதத்தின் . மூலம், பொருளாதார உதவியாளர் பதவியின் சம்பளக் குறியீடு, அப்பதவியில் இருப்பவருக்குத் தனிப்பட்டதாக இருக்கும் வகையில் MN6 எனத் திருத்தப்பட்டு நடவடிக்கை எடுக்குமாறு தென் மாகாண பிரதம செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, நீண்ட காலமாகப் முறைப்பாட்டாளரின் பதவிக்கு உரிய சம்பள அளவை தீர்மானிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெற முடியாமல் இருந்த அங்கீகாரத்தை நாங்கள் தலையிட்ட ஒன்றரை (1 ½) ஆண்டுகளுக்குள் பெற்றதால், முறைப்பாட்டாளரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

**இல: OMB/P/2/5/4805/2024** **டாக்டர் விஸ்மா சஜித் ஓபதா**

முறைப்பாட்டாளரான களுத்துறை போதனா மருத்துவமனையில் மருத்துவராகப் பணியாற்றி வரும் வாத்துவ, பொத்துப்பிட்டிய, சுற்றுவட்ட வீதி, 130 A/1 என்ற முகவரியில் வசிக்கின்ற திரு. விஸ்மா சஜித் ஓபதா அவர்கள் களுத்துறை போதனா மருத்துவமனைக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு சுகாதார அமைச்சின் மூன்றாம் நிலை சேவைகள் பிரிவில் மருத்துவர்களின் சம்பள உயர்வுகள் மற்றும் சம்பளங்களைச் செயலாக்க எழுதுநர் நீண்ட காலமாக இல்லாததால், சம்பள உயர்வுகள் மற்றும் கொடுப்பனவுகளைச் செயலாக்குவதில் ஏற்படும் செயல்திறன் குறைபாடு குறித்து 2024.12.21. ஆம் திகதியன்று அவர் ஒரு முறைப்பாட்டை செய்து துரிதமாக தனது சம்பள உயர்வை உடனடியாக வழங்கி, தனது தனிப்பட்ட கோப்பை புதிய பணியிடத்திற்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரிடமிருந்து 2025/01/21 அன்று ஒரு அறிக்கை கோரப்பட்டது. அந்தக் கடிதத்திற்கு எந்தப் பதிலும் வராததால், முதல் நினைவூட்டல் 2025/03/03 அன்று அனுப்பப்பட்டதோடு. அதற்குப் பதிலளிக்கும் விதமாக, சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளரிடமிருந்து 2025/03/19 அன்று ஒரு அறிக்கை அனுப்பப்பட்டது. அதன்படி, முறைப்பாட்டாளரின் தனிப்பட்ட கோப்பு, அவரது புதிய பணியிடமான களுத்துறை போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, முறைப்பாட்டாளரின் சம்பள உயர்வைச் தயாரிப்பது மற்றும் உரிய முறையில் பணம் செலுத்துவது தொடர்பான அவரது கோரிக்கை, எங்கள் நிறுவனத்தின் தலையீட்டின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

தனது கோரிக்கையை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதில் தலையிட்ட ஆணையாளர் உள்ளிட்ட ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்து, முறைப்பாட்டாளர் 2025/04/10 திகதியிட்ட ஒரு கடிதத்தையும் சமர்ப்பித்திருந்தார்.

**இல: OMB/P/2/6/3893/2024** **திரு. எம்.ஜி.பி. முதிதானந்த**

விண்ணப்பதாரரான மாத்தறையைச் சேர்ந்த திரு. எம்.ஜி.பி. முதிதானந்தா, சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் பணிபுரிவதோடு அவரால் 2024 ஆம் ஆண்டில் செய்த மேலதிக நேரப் பணிக்காகச் செலுத்தப்பட வேண்டிய தொகையானது அந்த நிறுவனத்தின் முனைய முகாமையாளரால் வழங்கப்பட்ட ஒரு கடிதத்தின் அடிப்படையில் கழிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த கடிதம் விண்ணப்பதாரர் உட்பட ஊழியர்களும் மேலதிக நேரப் பணிகளைச் செய்த பின்னரே வழங்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டு 2024/12/24 அன்று அனுப்பப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்தப் பிரச்சினை தொடர்பாக சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) அவர்களிடம் 2025/01/06 அன்று ஒரு அறிக்கை கோரப்பட்டது.

அந்தக் கடிதத்தின்படி, அந்த நிறுவனத்தினால் 2025/01/15 திகதியன்று அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் கூறப்பட்டுள்ளபடி, அந்த நிறுவனத்தால் வெளியிடப்பட்ட 2018/05/14 ஆம் 024-595 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி, அனைத்து ஊழியர்களது மாதாந்த மேலதிக நேர மொத்த ஊதியம் அவர்களின் அடிப்படைச் சம்பளத்தைத் விஞ்சக்கூடாது என்பதாகும். அதன்படி, திரு. எம்.ஜி.பி. முதிதானந்த அவர்களால் 2024 டிசம்பர் மாதத்திற்காகக் கோரப்பட்ட ரூ.71,741.93 தொகை செலுத்தப்படவில்லை.

இருப்பினும், அறிக்கையிலுள்ள விடயங்களின்படி, 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து அந்தச் சுற்றறிக்கை. செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற போதிலும், அந்தச் சுற்றறிக்கை 16/12/2024 முதல் செயல்படுத்தப்பட்டிருப்பது கண்டறியப்பட்டதால், அவ்வாறு தாமதமாகி சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையைச் செயல்படுத்துவதற்கான காரணங்களைக் கேட்டு மீண்டும், சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 05/02/2025 ஆம் திகதியன்று ஆணையாளரினால் கடிதமொன்று அனுப்பப்பட்டு மேலதிக விபரங்கள் கோரப்பட்டது. இதேபோல், இந்த அறிக்கை தொடர்பில் மற்றும் மீண்டும் விசாரிக்கப்பட்ட கடிதம் தொடர்பிலும் விடயங்களை உள்ளடக்கி, விண்ணப்பதாரருக்கும் 24.02.2025 அன்று ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 2025/02/05 ஆம் திகதிய அனுப்பிய கடிதத்திற்கு பதில் வராததால், அந்நிறுவனத்திற்கு 2025/02/20 அன்று முதல் நினைவூட்டல் அனுப்பப்பட்டது. அந்தக் கடிதத்திற்கு அவர்கள் பதிலளிக்கத் தவறியதால், அந்நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர்க்கு (நிதி) இது தொடர்பான விரிவான அறிக்கையுடன் 2025/07/02 அன்று நேரில் ஆஜராகுமாறு ஆணையாளர் உத்தரவிட்டார்.

நேரில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்ட திகதிக்கு முந்தைய நாள், அந்நிறுவனம் ஆணையாளருக்கு தொடர்புடைய அறிக்கையைச் சமர்ப்பித்தது. மேலும், 2024/12/11 திகதியிட்ட கடிதத்தின்படி, தங்களால் முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதன்படி, விண்ணப்பதாரர் கோரிய மேலதிக நேர சேவைக்கான தொகை அவருக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, திரு. எம்.ஜி.பி. முதிதானந்தவினது கோரிக்கையான அவர் ஆற்றிய மேலதிக நேரப் பணிக்காக சேர வேண்டிய ரூ. 71,741.93 தொகை நிறுவனத்தால் ஒரே தவணையில் செலுத்தப்பட்டமையினால் அந்தத் தொகையைப் பெறுவதற்குத் தலையிட்டுத் தேவையான ஏற்பாடுகளைச் செய்த ஆணையாளருக்கும் பணியாளர்களுக்கும் தனது பணிவான நன்றியைத் தெரிவித்து 2025/07/07 திகதியன்று கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது.

**இல: OMB/P/2/6/3915/2025** **திரு. பி.எம்.ஏ.பி. ரவிநாத், அனுராதபுரம்.**

முறைப்பாட்டாளரான கிரிபத்கொடை ஆதார மருத்துவமனையில் மருந்தாளராகப் பணிபுரியும் திரு. பி.எம்.ஏ.பி. ரவிநாத், மேல் மாகாணத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் துணை மற்றும் இடைநிலை மருத்துவ சேவைகளில் பதவிஉயர்வு முறையாக மேற்கொள்ளப்படாததன் காரணமாக, தடைகாண் பரீட்சைகளுக்கு முறைப்பாட்டாளருக்கு கலந்துகொள்ள முடியவில்லை என்று கூறி 25/02/2025 அன்று ஒரு முறைப்பாட்டைத் தாக்கல் செய்தார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆணையாளரின் வாய்மொழி அறிவுறுத்தல்களின்படி, மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இடமிருந்து 17/03/2025 அன்று ஒரு அறிக்கை கோரப்பட்டது. அதன்படி, முறைப்பாட்டாளர் பணிபுரிந்த கிரிபத்கொட ஆதார மருத்துவமனைக்கும், கம்பஹா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கும் இடையே இந்தப் பிரச்சினை தொடர்பாக கடிதங்களும் அறிக்கைகளும் பரிமாறப்படு. இறுதியாக, திரு. பி.எம்.ஏ.பி. ரவிநாத்தை iii தரத்திலிருந்து ii தரத்திற்குப் பதவி உயர்வு அளிப்பது தொடர்பான உரிய கடிதம், மாகாண பொது சேவை ஆணைக்குழுவால் 10/03/2025 அன்று வழங்கப்பட்டுள்ளதாக கம்பஹா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றின் பிரதி கிரிபத்தொடை ஆதார வைத்தியசாலை மூலமாக எனக்கு அனுப்பப்பட்டிருந்தது ம் அனுப்பப்பட்டது. எமது நிறுவனத்தின் தலையீட்டின் மூலம் முறைப்பாட்டாளரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

முறைப்பாட்டாளர் தனது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கும், இவ்விஷயத்தில் தலையிடுவதற்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்த ஆணையாளருக்கும் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்து 28/07/2025 திகதியன்று ஒரு கடிதத்தையும் சமர்ப்பித்திருந்தார்.

நாரம்மலை, கணேகொட, தலகஹாய, என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஏ.பி.எஸ்.டி. அபேயநாயக்க, 2022.12.29 அன்று ஒரு முறைப்பாட்டைத் தாக்கல் செய்து அதில், முறைப்பாட்டாளர் 1985.12.07 அன்று பதிவுசெய்த பிரதியாளராக பணியாளராகப் பணியில் சேர்ந்து, 1992.08.20 அன்று நிரந்தர ஓய்வூதியப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். பின்னர் அவர் 60 வயதை நிறைவுசெய்து 2019.03.11 அன்று ஓய்வு பெற்றிருந்தபோதிலும், முறைப்பாட்டாளரின் பதிலாள் பணிக்காலம் ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய மனு தொடர்பாக அஞ்சல் தலைமை அதிகாரியிடமிருந்து அறிக்கைகள் கோரப்பட்டன. அதன்படி, பதிலாள் பணிக்காலம் உட்பட மொத்தப் பணிக்காலம் 33 ஆண்டுகள், 03 மாதங்கள் மற்றும் 04 நாட்கள் என்றபோதிலும், பதிலாள் பணிக்காலம் தொடர்பான நன்னடத்தைப் பதிவேடுகள் இல்லாத காரணத்தால், ஓய்வூதியத்திற்காக அது 26 ஆண்டுகள், 06 மாதங்கள் மற்றும் 21 நாட்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. இருப்பினும், மாற்றுப் சேவைக் காலத்தில் அவர் தொடர்ச்சியாகப் பணியாற்றியுள்ளார் என்பதை நிரூபிப்பதற்காக, அவருடன் பணியாற்றிய இரண்டு சமகாலத்தவர்களின் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு முறைப்பாட்டாளருக்குத் தெரிவிக்கப்பட்ட பின்னர், அவரால் பரிந்துரைக்கப்பட்ட அலுவலகத்தைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகளின் பெயர்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதன்படி, மூன்று பேர் கொண்ட குழு ஒன்று அந்தத் தகவல்களை ஒப்பிட்டுப் பார்த்ததில், முறைப்பாட்டாளர் 1985.12.06 முதல் பணியில் இருந்து வந்தது உறுதி செய்யப்பட்டது. மேலும், மாற்றுப் சேவைக் காலமும் ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்பட வேண்டியிருப்பதால், அக்குழுவின் அறிக்கை அங்கீகாரத்திற்காக ஓய்வூதியத் திணைக்களததிற்கச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பின்னர், இது தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திடம் வினவியதற்கமைய, 1985.12.07 முதல் 1992.08.19 வரையிலான சேவைக்காலத்தில் 2/3 அளவைச் சேர்க்க அங்கீகாரம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர், இது தொடர்பாக அஞ்சல் திணைக்களத்திடம் வினவியபோது, "ஓய்வூதிய சுற்றறிக்கை 03/2008 (திருத்தம் 1)-இன் படி விதவை மற்றும் அனாதை பங்களிப்புகளைக் கணக்கிட்டு ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும்" என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, 1985.12.07 முதல் 1992.08.19 வரையிலான காலகட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கிற்கான ஓய்வூதியத்தைக் கணக்கிட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, அனைத்து ஆவணங்களும் தயாரிக்கப்பட்டு ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, ஓய்வூதியத் திணைக்களத்திடம் மீண்டும் வினவியபோது, ஓய்வூதிய திருத்தம் தொடர்பான PD06 விண்ணப்பம் குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டதால், அதைச் சரிசெய்யுமாறு கேட்டுக் கொண்ட பிறகும் சம்பந்தப்பட்ட நிறுவனம் பதில் அனுப்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி, தபால் திணைக்களத்தின் தபால் அதிபரிடமிருந்து மீண்டும் அறிக்கைகள் கோரப்பட்டன. அதன்படி, அதிகாரியின் மொத்த சேவைக் காலத்திற்கான முதல் நியமனக் கடிதம் பதிலளிக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு மாற்றாக வேறு நன்னடத்தைப் பதிவேடு இல்லாததால், அவருடன் பணியாற்றிய இரண்டு ஊழியர்களின் நன்னடத்தைப் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட்டு, அந்த நன்னடத்தைப் பதிவேடுகளின் அடிப்படையில், அதிகாரியின் ஓய்வூதியம் இணையவழி முறை மூலம் ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சரிசெய்யப்பட்டது. இருப்பினும், இந்த ஓய்வூதியத் திருத்தத்திற்கான அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்த போதிலும், சம்பந்தப்பட்ட அதிகாரியின் முதல் நியமனக் கடிதத்தை அனுப்புமாறு சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும், முறைப்பாட்டாளரின் பிரச்சினைக்கு நிவாரணம் அளிக்காமல், கடிதப் பரிமாற்றங்கள் மூலம் அது தள்ளிப் போடப்படுகிறது என்பது தெளிவாகத் தெரிந்ததால், முறைப்பாட்டாளரின் ஓய்வூதியத்தை உடனடியாகத் திருத்தி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் நான் தெரிவித்தேன்.

பின்னர், முறைப்பாட்டாளரின் ஓய்வூதியத்தை திருத்தி அமைப்பதற்காக அனுப்பப்பட்ட PD06 விண்ணப்பம் இணையவழியில் அங்கீகரிக்கப்பட்டு, அதன்படி திருத்தப்பட்ட சம்பளம் ஜூன் மாதம்

முதல் நிர்ணயிக்கப்பட்டதாகவும், மேலும் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக, திருத்தப்பட்ட திறைசேரிப் படிவம் 79-ஐ வழங்கி, ஓய்வூதியதாரர் தனது ஓய்வூதியத்தைப் பெறும் பிரதேச செயலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகு, பிரதேச செயலகத்திலிருந்து AR படிவம் அனுப்பப்பட்ட பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர், பிரதேச செயலகத்தால் அனுப்பப்பட்ட AR படிவத்தின்படி, இந்தப் முறைப்பாட்டாளருக்கு திருத்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்பட்டு, நிலுவைத் தொகையும் செலுத்தப்பட்டது என்று ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்தது.

பின்னர், முறைப்பாட்டாளர் ஒரு கடிதம் அனுப்பியுள்ளதோடு அதில், எமது நிறுவனத்தின் தலையீட்டால், மாற்றுப் பணிக்காலத்தையும் சேர்த்து ஓய்வூதியத்தைப் பெறவும், அது தொடர்பான நிலுவைத் தொகையைப் பெறவும் முடிந்ததாகவும், இது தொடர்பாக அவர் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

**இல: OMB/P/2/7/1419/2024** **திரு. பி. நிஹால் சந்திரசிறி**

ஹிங்குரகொட, சிங்ககம, அலுத் ஓயா, இல. 250-இல் வசிக்கும் திரு. பி. நிஹால் சந்திரசிறி, அவர்களால் 25.08.2024 ஆம் திகதியன்று முறைப்பாட்டை முன்வைத்து முறைப்பாட்டாளர் தாம் இலங்கை இராணுவத் தொண்டர் படையில் 16 ஆண்டுகள் 11 மாதங்கள் பணியாற்றியதாகவும், சேவையில் இருந்தபோது ஏற்பட்ட ஒரு விபத்தின் காரணமாக 01.12.2023 அன்று சேவையிலிருந்து ஓய்வு பெற்றதாகவும் தெரிவித்துள்ளார். நிகழ்ந்த விபத்தின் காரணமாக அவர் மிகவும் உதவியற்ற நிலையில் உள்ளதாகவும், வாழ்வதற்கு வேறு வருமான வழி இல்லாததால், தமது ஓய்வூதியத்தைச் பெற்றுத் தருமாறும் அவர் கோரியுள்ளார்.

மேற்கூறிய மனு தொடர்பாக இராணுவத் தளபதி மற்றும் பொறியியளார் சேவைகள் படைப்பிரிவின் மேஜர் (க.பொ. அதிகாரி) ஆகியோரிடமிருந்து அறிக்கைகள் கோரப்பட்டன. அதன்படி, பொறியியளாளர் சேவைகள் படைப்பிரிவின் மேஜர் (க.பொ. அதிகாரி), அறிக்கையைப் பரிசீலித்து, மருத்துவக் காரணங்களுக்காகப் முறைப்பாடுதாரரை 2022.09.29 அன்று இராணுவ சேவையிலிருந்து விடுவிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதன்படி, அனைத்துச் சலுகைகள் மற்றும் ஓய்வூதியத்துடன் அவரை இராணுவத்திலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது குறித்துப் முறைப்பாட்டாளருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், தனது 22 ஆண்டுகால சேவை முடியும் வரை பணியாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். அதன்படி, சேவைநீக்கச் செயல்முறைக்குத் தீர்வு காணவும், அச்செயல்முறையை மேற்கொள்ளவும் சிறிது காலம் கடந்துவிட்டது. மேலும், முறைப்பாட்டாளரின் சேவைக்காலம் 12 ஆண்டுகள் என்பதால் அவர் ஓய்வூதியத்திற்குத் தகுதியுடையவர் என்பதால், ஓய்வூதியக் கோப்பு திருத்தப்பட்டு, ஓய்வு பெறும் திகதியாக 2023.11.03 குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நிலுவைத் தொகை/ஊனமுற்றோர் உதவித்தொகை/ஓய்வூதிய உரிமை ஆகியவை 2024.06.16 அன்று தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், ஓய்வு கோப்பில் ஓய்வு பெறும் திகதி 2023.12.01 எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், மருத்துவ காரணங்களுக்காக ஒரு இதர தரவரிசை வீரரை பணிநீக்கம் செய்யும்போது, இராணுவ சேவை ஒழுங்குமுறைகளின் பிரிவு 84-இன் பிரகாரம் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின்படி, மருத்துவ சபையின் அங்கீகார திகதியிலிருந்து 28 நாட்களுக்குள் சேவைநீக்க செயல்முறை மேற்கொள்ளப்பட வேண்டும். நீங்கள் 27.10.2022 அன்று அனைத்துப் படிகளுடன் ஓய்வு பெற்றிருக்க வேண்டும் என்றாலும், உங்கள் வேலையை முடித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை நீங்கள் எடுக்காததாலும், அக்டோபர் 2023 வரை சம்பளம் மற்றும் படிகளைப் பெற்றதாலும், மேற்கூறிய திகதியில் ஓய்வு ஏற்பாடுகளைச் செய்வதில் ஒரு சிக்கலான சூழ்நிலை எழுந்துள்ளது. சேவைநீக்கத்திற்கான பரிந்துரை 27.10.2022 அன்று பெறப்பட்டிருந்தாலும், நீங்கள் அக்டோபர் 2023 வரை பணியில் இருந்து சம்பளம் மற்றும் படிகளைப் பெற்றதாலும், அந்த சம்பளம் மற்றும் படிகள் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டாலும், முறைப்பாட்டாளருக்கு அந்தத் தொகையைச் செலுத்தும் திறன் இல்லாததால், உங்களை மீண்டும்

பணியில் சேர்த்து, பிரிவில் பொதுப் பணிகளுக்கு நியமிக்க வாய்ப்புள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. எனவே, உங்களின் சேவையிலிருந்து விலகுவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அக்டோபர் 2023 வரை நீங்கள் சேவையில் இருந்து, சம்பளம் மற்றும் படிகளைப் பெற்று வந்ததால், மேற்கூறிய திகதியில் ஓய்வூதிய ஏற்பாடுகளைச் செய்வதில் ஒரு சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது, மேலும் மேற்கொண்டு எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியவில்லை. இருப்பினும், இது தொடர்பாக பனாகொட இராணுவ நிலையத்திலிருந்து ஒரு அறிக்கை கோரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர், மேலதிக விசாரணைக்குப் பிறகு, அந்த அறிக்கையை அனுப்பிவைத்து, 2025 ஏப்ரல் முதல் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக முறைப்பாட்டாளரின் கருத்துக்கள் கேட்கப்பட்டன. அதன்படி, இதுவரை தனக்கு பாதி ஓய்வூதியம் மட்டுமே கிடைத்து வருவதாகவும், முழுச் சம்பளம், ஊனமுற்றோர் படி மற்றும் உயர்த்தப்பட்ட சம்பளம் ஆகியவை அரசால் வழங்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதன்படி, மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்படி, ஊனமுற்றோர் உதவித்தொகை மற்றும் அரசாங்கத்தால் உயர்த்தப்பட்ட சம்பளம் வழங்குவது தொடர்பான விடயம் இராணுவ சம்பளம் மற்றும் பதிவுகள் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் 1992.08.03 திகதியிட்ட அதிவிசேட வர்த்மானி இல. 726/11-ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி, ஓய்வூதியம் வழங்கும் வழக்கமான நடைமுறையின்படி, அவரது சேவைக் காலத்தின் அடிப்படையில் அவருக்கு உரிமையுள்ள சேவை ஓய்வூதியம் ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் உதவித்தொகை தொடர்பான சம்பளம் மற்றும் ஆவணங்கள் சம்பளம் மற்றும் ஆவணங்கள் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், முறைப்பாட்டாளரின் மாதாந்த ஓய்வூதியத்துடன் ஊனமுற்றோர் உதவித்தொகையும் எதிர்காலத்தில் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, அரசாங்கத்தால் உயர்த்தப்பட்ட சம்பளம் மற்றும் உதவித்தொகைகள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும் என்றும், இது தொடர்பாக இராணுவத்தின் சம்பளம் மற்றும் ஆவணங்கள் பணிப்பாளர் சபை அதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, எங்களின் தலையீட்டின் காரணமாக, முறைப்பாட்டாளர் இதுவரை பெறாமல் இருந்த ஓய்வூதியத்தைப் பெற முடிந்தது.

**இல. : OMB/P/2/9/1617/2024** **திரு. டி.எல்.சி. குமார**

இலங்கை துறைமுக அதிகார சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவில் உள்ளக கணக்காய்வு உதவியாளராகப் பணியாற்றி வந்த திரு. டி.எல்.சி. குமார, 2022.12.01 முதல் 2024.11.30 வரை 2 ஆண்டு காலத்திற்கு ஊதியமில்லா வெளிநாட்டு விடுப்பின் கீழ் கனடாவில் பணியாற்றி வந்தார்; மேற்படி லீவுக் காலம் 2024.11.30 அன்றுடன் முடிவடைந்திருந்தது.

2022.06.13 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய, அரச, கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அதிகாரசபைகளின் ஊழியர்கள், தொடக்கத்தில் 2 ஆண்டுகளுக்கும் பின்னர் 3 ஆண்டுகளுக்கும் என 5 ஆண்டு காலத்திற்கு வெளிநாட்டு லீவு பெற தகுதியுடையவர்கள் என்பதோடு, திரு. குமார வெளிநாட்டு லீவு பெற்று, அ.நி.சு 14/2022-க்கு இணங்க ஒப்பந்த உடன்படிக்கைகளின் பேரில் பணியில் ஈடுபட்டிருந்தார். திரு. குமார், தனது விடுப்பை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கான முறையான அங்கீகாரத்தைப் பெறும் செயல்முறையில் ஈடுபட்டிருந்த நிலையில், 2 ஆண்டுகளுக்கான முதல் கட்ட லீவு முடிவடைவதற்கு 4 மாதங்களுக்கு முன்பு, எந்தவொரு பணிப்பாளர் சபை தீர்மானமோ அல்லது உள்ளக சுற்றறிக்கையோ இன்றி, லீவு அனுமதி கடிதம் வழங்கப்படாமல் லீவு விண்ணப்பக் கோப்பு மூடப்பட்டிருப்பதை அறிந்துகொண்டார்.

அதன்படி, திரு. குமார, தேவையான அனைத்து அங்கீகாரமும் பெறப்பட்டுவிட்டதால், தனது விடுப்பை அடுத்த 3 ஆண்டுகளுக்கு நீடிக்கக் கோரி, 2025.01.09 அன்று ஓஎம்பீ 01 படிவத்தில் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரரிடம் ஒரு முறையான முறைப்பாட்டைச் சமர்ப்பித்தார்.

அதன்படி, அதிகாரசபையின் முகாமைத்துவப் பணிப்பாளரிடம் 2025.01.17 அன்று துறைமுக ஒரு அறிக்கை கோரப்பட்டது. குறிப்பிட்ட காலத்திற்குள் எந்தப் பதிலும் வராததால், 2025.03.12 அன்று நினைவூட்டல்கள் வழங்கப்பட்டன. முகாமைத்துவப் பணிப்பாளர் அதற்கு 2025.03.26 ஆம் திகதியன்று அன்று பதிலளித்ததோடு 2025.02.28 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான லீவு அங்கீகாரம் மறுஅறிவித்தல் வரும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதற்கும், சம்பந்தப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கினால், திரு. குமாராவின் லீவு 2024.11.30-க்குப் பிறகு மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட அறிக்கை முறைப்பாட்டாளருக்கு அனுப்பப்பட்டு, அவரது கருத்துக்கள் கோரப்பட்டன. பணிப்பாளர் சபையின் தீர்மானிக்கப்பட்ட 2025.02.28 வரை, தனது லீவு விண்ணப்பம் தொடர்பான அனைத்து ஆவணப் பணிகளும் வேண்டுமென்றே நிறுத்தப்பட்டதாகவும், இது தொடர்பாக எந்த நியாயமான காரணங்களும் கூறப்படவில்லை என்றும், அதன் விளைவாகத் தனக்கு பாதிப்பு ஏற்பட்டதாகவும் முறைப்பாட்டாளர் திரு. குமாரா தெரிவித்தார். இந்தக் கருத்துக்கள் துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டு, இது தொடர்பாக அவர் எடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை கோரப்பட்டது. முகாமைத்துவப் பணிப்பாளர் குறிப்பிட்ட காலத்திற்குள் பதிலளிக்கத் தவறியதால், 16.07.2025 அன்று நினைவூட்டல்கள் வழங்கப்பட்டன.

அதன்படி, முகாமைத்துவப் பணிப்பாளர் 29.07.2025 அன்று பதிலளித்து, மேற்கண்ட விடுமுறை அங்கீகாரம் குறித்த விரிவான அறிக்கையை வழங்கினார். அதேபோல் திரு. குமாராவின் லீவை மேலும் ஓராண்டுக்கு, அதாவது 30.11.2025 வரை நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்கூறிய தீர்மானத்திற்கு திரு குமார இணங்குகின்றாரா என்பதை 2 வாரங்களுக்குள் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அந்த தீர்மானத்தில் அதிருப்தியடைந்த அவர், தனது லீவை முழு 5 ஆண்டுகளாக, அதாவது 30.11.2027 வரை நீடிக்க இந்த அலுவலகம் தலையிட வேண்டும் என்று மீண்டும் கோரிக்கை விடுத்தார்.

.அதன்படி, மேற்கண்ட லீவு அங்கீகாரத்தைப் பெறுவது தொடர்பான முக்கிய விடயங்கள் மற்றும் அதற்கான பரிந்துரைகளை விவரித்து, 2025.09.04 அன்று துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. மேலும், எடுக்கப்படவிருக்கும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து 2 வாரங்களுக்குள் குறைகேள் அதிகாரிக்கு தெரிவிக்குமாறும் அவருக்கு அறிவுறுத்தப்பட்டது.

திரு. குமாராவின் கோரிக்கையின்படி, முழு லீவுக் காலத்தையும் உள்ளடக்கும் வகையில், சம்பந்தப்பட்ட லீவு 2027.11.30 வரை நீடிக்கப்பட்டதாக முகாமைத்துவப் பணிப்பாளரின் 2025.11.15 திகதியிட்ட கடிதம் தெரிவித்தது. அதன்படி, முறைப்பாட்டாளர் இந்த நிறுவனத்திடமிருந்து எதிர்பார்த்த நிவாரணத்தைப் பெற்றதால், கோப்பில் உள்ள நடவடிக்கைகள் முடித்து வைக்கப்பட்டன. மேலும், 2025.12.29 அன்று முறைப்பாட்டாளரான திரு. குமாராவுக்கு பிரதிகளுடன் முகாமைத்துவப் பணிப்பாளருக்கும் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டது.

சவூதி அரேபியாவில் உள்ள ஒரு சேவை நிறுவனத்தில் வேறொருவரின் பெயரில் தனக்கு அளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு தொடர்பாக இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் முறையாகத் தலையிடவில்லை என்றும், அது குறித்துக் கேட்டபோது, காரணங்கள் ஏதுமின்றித் தான் பணியிலிருந்து நீக்கப்பட்டு விடுதியில் தடுத்து வைக்கப்பட்டதாகவும், அதனால் அந்தக் காலத்திற்கான சம்பளம் வழங்கப்படாமல் மன உளைச்சல் ஏற்பட்டதாகவும், மேலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடம் அளிக்கப்பட்ட முறைப்பாடு நியாயமான விசாரணை இன்றி முடித்து வைக்கப்பட்டதாகவும் திருமதி ஜி. சமந்தி டி சில்வா அவர்கள், 2024.05.07 திகதிய தனது முறைப்பாட்டில், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு தெரிவித்திருந்தார்.

அதன்படி, 2024.06.18 அன்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவரிடமிருந்து ஓர் அறிக்கை கோரப்பட்டது. 2024.08.15 அன்று தலைவர் அளித்த பதில்களில் இந்த அலுவலகம் திருப்தியடையவில்லை. மேலும், ஒரு வெளிநாட்டுத் தொழிலாளிக்கு அநீதி இழைக்கப்பட்டபோது, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இரு தரப்பினரையும் வரவழைத்து, இயற்கை நீதியின் கோட்பாடுகளுக்கு இணங்க ஒரு விசாரணையை நடத்தவில்லை என்பதும் கவனிக்கப்பட்டது. அதன்படி, திருமதி சமந்திக்கு வழங்கப்பட்ட சம்பள விவரங்கள், முறைப்பாட்டைக் கையாண்ட அதிகாரிகளின் விவரங்கள் மற்றும் அவர்களால் வழங்கப்பட்ட இறுதி அறிக்கையின் பிரதிகள் பெறப்பட்டன.

மேலும், மனுதாரர் திருமதி சமந்தி மற்றும் எதிர்வாதியான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது மேலாளர் ஆகியோர் 28.01.2025 அன்று ஒம்புட்ஸ்மேன் அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு ஒரு விசாரணை நடத்தப்பட்டது. ஒரு அரச நிறுவனம் என்ற வகையில், நாட்டிற்கு அந்நியச் செலாவணியைக் கொண்டு வரும் வெளிநாட்டு இலங்கைத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் அவர்களின் பாதுகாப்பும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று ஆணையாளர் வலியுறுத்தினார். மேலும், சம்பந்தப்பட்ட முறைப்பாடு குறித்து அனைத்துத் தரப்பினரையும் வரவழைத்து ஒரு நியாயமான விசாரணை நடத்தி, 3 மாதங்களுக்குள் ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்தார்.

இதன் பின்னர் அனுபப்பட்ட நினைவட்டல் மற்றும் பின்னூட்டலின் பின்னர் மேற்படி விடயம் தொடர்பாக ஓர் விசாரணை நடத்தப்பட்டு, முறைப்பாட்டு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (இணக்கப்பாடு), 30.09.2025 அன்று பாராளுமன்ற நிர்வாக விவகார ஆணையருக்குத் தகவல் அளித்தார். அதன்படி, திருமதி சமந்திக்கு செலுத்தப்படாத 4 மாதங்களுக்கான ரூ. 319,400 ஊதியத்தை செலுத்த அவர் வெளிநாடு செல்ல உதவிய முகவர் நிறுவனத்திற்கு உத்தரவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, சம்பந்தப்பட்ட முகவர் நிலையத்தின் மூலம், திருமதி சமந்திக்கு உரிய நிலுவைத் தொகையை இரண்டு தவணைகளில் வழங்க ஒப்புக்கொண்டது. திருமதி சமந்தி, தனது நிலுவைத் தொகை சம்பந்தப்பட்ட முகவர் நிலையத்தினால் 11.10.2025 அன்று வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்து, 13.11.2025 அன்று இந்த அலுவலகத்திற்கு நன்றிக் கடிதம் ஒன்றை அனுப்பினார். முறைப்பாட்டாளர் இந்த முகவர் நிலையத்திடமிருந்து எதிர்பார்த்த நிவாரணத்தைப் பெற்றதால், சம்பந்தப்பட்ட OMB/P/2/9/1498/2024, ஆம் இலக்க கோப்பு 18.11.2025 முதல் நிறைவு செய்யப்பட்டது.

**அத்தியாயம் 02**

**முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்**

# *2. புள்ளிவிபரப் பகுப்பாய்வு*

## 2.1 புள்ளிவிபர பகுப்பாய்வு

2025 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற மனுக்கள் குழுவினால் விசாரணைக்காகவும் அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவும் எந்தவொரு முறைப்பாடுகளுஞ் பரிந்துரைக்கப்படவில்லை இருப்பினும் பொது மக்களிடமிருந ்து நேரடியாக 1628 முறைப்பாடுகள் இவ்வலுவலகத்திற்கு கிடைத்துள்ளன. அந்த 1628 முறைப்பாடுகிளல் 773 முறைப்பாடுகள் ஒம்புட்ஸ்மனின் (ழுஅடிரனளஅயெ) வரம்பிற்குள் வரவில்லை. 2024 ஆம் ஆண்டு இறுதி வரை நிறைவு செய்ய முடியாமல் அடுத்த ஆண்டிற்கு கொண்டு வரப்பட்ட 885 முறைப்பாடுகளின் பணிகளும் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்து. அதற்கமைய, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் கையாளுவதற்கு மொத்தம் 2513 முறைப்பாடுகள் இருந்தன.

***அட்டவணை 1 - புள்ளிவிபரப் பகுப்பாய்வு - 2025 ஆம் ஆண்டு***

| | | முடிவுறுத்தப்படாதது | முடிவுறுத்தப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | **2024 ஆம் ஆண்டு இறுதியில் மீதியாக உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | | | 885 |
| (1) | **2025.01.01 இலிருந்து 2025.12.31 ஆம் திகதி வரை பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகள்** | | | |
| (I) | நேரடியாகப் பெறப்பட்ட முறைப்பாடுகள் (536) | 1628 | | |
| (II) | பொது மனுக்கள் செயற்குழுவினால் அனுப்பப்பட்ட முறைப்பாடுகள் | | | |
| (2) | 2025 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை | | | 1628 |
| | **2025 ஆம் ஆண்டில் புலனாய்வு செய்யவேண்டியிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | | | **2513** |
| | | | | |
| | **2025 ஆம் ஆண்டில் புலனாய்வு செய்யப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | | | |
| (1) | ஆரம்ப நிலையில் முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகள் | | | |
| i | ஒம்புட்சுமானின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட முறைப்பாடுகள் | | 990 | |
| ii | தெளிவான நிவாரணத்திற்காக கோரிக்கை செய்யப்படாதகாரணத்தால் கவனம் செலுத்தப்டாத முறைப்பாடுகள் | | 41 | 1031 |
| (2) | ஏற்புடைய நிறுவனங்களிடமிருந்து அறிக்கைகள் கோரப்பட்ட பின்னர் விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | | |
| i | முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு அமைய அது தொடர்பில் பரீட்சிப்பு செய்தல் அவசியம் எனும் காரணத்தால் குறித்த நிறுவனங்களிடம் இருந்து அறிக்கைகள் கோரப்பட்ட முறைப்பாடுகள் – முடிவுறுத்தப்படவில்லை | 261 | | |
| ii | அறிக்கைகள் பெறப்பட்ட பின்னர் அதில் குறிப்பிடப்பட்ட விடயத்திற்கு அமைய மேலும் அதே நிறுவனத்திடம் அல்லது வேறு தரப்பினரிடம் இருந்து அறிக்கை கோரப்பட்ட முறைப்பாடுகள் – முடிவுறுத்தப்படவில்லை | 168 | | |
| iii | முறைப்பாட்டாளர்களிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டுள்ள முறைப்பாடுகள் - முடிவுறுத்தப்படவில்லை. | 262 | | |
| iv | அறிக்கைகள் பெறப்பட்ட பின்னர் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட முறைப்பாடுகள் | | 112 | |
| v | அறிக்கைகள் கோரப்பட்ட பின்னர் கோரிக்கைகள் நிராகரிக்கப்ட்ட முறைப்பாடுகள் | | 265 | |
| vi | முறைப்பாட்டாளர்களின் அக்கறையின்மை காரணமாக முடிவுறுத்தப்பட்ட கோவைகள் | | 387 | 764 |
| (3) | **அறிக்கை கோரப்பட்டு தீர்மானமொன்றை எட்ட முடியாததால் இரு தரப்பினர்களையும் அழைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட முறைப்பாடுகள்** | | | |
| i | அறிக்கைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் முறைப்பாட்டாளர்களையும் பிரதிவாதிகளையும் அழைத்து இன்னமும் விசாரணை செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் - முடிவுறுத்தப்படவில்லை | 4 | | |
| ii | விசாரணையின் பின்னர் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | | 4 | |
| iii | விசாரணையின் பின்னர் அதற்குரியதாக பரிந்துரைகள் வழங்கப்பட்ட முறைப்பாடுகள்- முடிவுறுத்தப்படவில்லை. | 4 | | |
| iv | பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்ட பின்னர் நிவாரணம் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 15 | |
| v | வழங்கப்பட்ட பரிந்துரைகள் பரிசீலனை செய்யப்படாது காணப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | | 19 |
| | (1)+(2)+(3) மொத்த எண்ணிக்கை | | | 1814 |
| | **2025.12.31 ஆம் திகதியில் மீதியாக உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | | | 699 |

**2.2 முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்த விதம்**

2025 ஆம் ஆண்டில் கையாளுவதற்கு இருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2513 ஆகும் இதில் அடுத்த ஆண்டிற்கு கொண்டு செல்லப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 699 ஆகும். அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் 1814 முறைப்பாடுகளின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. (அட்டவனை 1 புள்ளிவிபர பகுப்பாய்வு 2025 இல் காட்டப்பட்டுள்ளவாறு) அந்த முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சுருக்கம் பின்வரும் வரைப்படம் 1 இல் விகள்ளப்பட்டுள்ளது.

*வரைபு 1 - 2025 ஆம் ஆண்டில் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்ட விதம்*




| | முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் விதம் | முறைப்பாடு களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | அதிகார எல்லைக்குள் உட்படாத முறைப்பாடுகள் | 1031 |
| | அறிக்கைகள் கோரப்பட்டு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட முறைப்பாடுகள் | 112 |
| | விசாரணையின் பின்னர் கோரிக்கை நிறைவேற்றப்பட்ட முறைப்பாடுகள் | 15 |
| | அறிக்கைகள் கோரப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | 656 |
| | அடுத்த ஆண்டில் நடவடிக்கை எடுப்பதற்காக மீதியாக உள்ள முறைப்பாடுகள் | 699 |
| **2025 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுப்பதற்காக இருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | | **2513** |

### 2.3 *மாதாந்த பகுப்பாய்வு*

2025 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்தப் புகார்களின் எண்ணிக்கை 1628 ஆகும். அதிகபட்ச புகார்களின் எண்ணிக்கையான 252 புகார்கள் டிசம்பர் மாதத்தில் பெறப்பட்டதுடன், குறைந்தபட்ச புகார்களின் எண்ணிக்கையான 72 புகார்கள் மே மாதத்தில் பெறப்பட்டன. அதற்கான விவரங்கள் 2ஆம் வரைபடத்தில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.

***படவரைபு -2 2025 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகள்***



## 2.4 *ஆண் / பெண் வகைப்பாடுத்தலின் கீழான பகுப்பாய்வு*

2025 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட 1141 முறைப்பாடுகள் ஆண்களாலும் 487 முறைப்பாடுகள் பெண்களாலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2 ஆவது அட்டவணையில் மற்றும் 3 ஆவது வரைபில் அவை விபரிக்கப்பட்டுள்ளன.

***அட்டவணை 2 - 2025 ஆம் ஆண்டில் ஆண்/ பெண் அடிப்படையில் பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை***

| மாதம் | ஆண் | பெண் | மாதாந்த பகுப்பாய்வு 2025 |
|---|---|---|---|
| ஜனவரி | 92 | 42 | 134 |
| பெப்ரவரி | 64 | 37 | 101 |
| மார்ச் | 87 | 52 | 139 |
| ஏப்பிரல் | 70 | 16 | 86 |
| மே | 52 | 20 | 72 |
| யூன் | 65 | 37 | 102 |
| யூலை | 121 | 53 | 174 |
| ஓகஸ்ட் | 73 | 32 | 105 |
| செப்டம்பர் | 100 | 45 | 145 |
| ஒக்டோபர் | 115 | 60 | 175 |
| நவம்பர் | 97 | 46 | 143 |
| டிசெம்பர் | 205 | 47 | 252 |
| **மொத்தம்** | **1141** | **487** | **1628** |

***வரைபு 3 - 2025 ஆம் ஆண்டில் ஆண்/ பெண் அடிப்படையில் பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை***



## 2.5 மாவட்ட ரீதியிலான பகுப்பாய்வு

2025 ஆம் ஆண்டில் அதிகபடியான முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளன அதன் எண்ணிக்கை 195 ஆகும் அதனைத் தொடர்ந்து அதிக முறைப்பாடுகள் கொண்ட மாவட்டங்களாக காலி மாவட்டத்திலிருந்து 156 முறைப்பாடுகளும் இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 145 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

*வரைபு 4 - முறைப்பாட்டாளர்கள் வசிக்கும் மாவட்டத்திற்கு அமைய செய்யப்பட்ட வகைப்படுத்தலுக்கு அமைய 2025 ஆம் ஆண்டில் கிடைத்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை*



**2.6 விடயபரப்பு ரீதியிலான பகுப்பாய்வு**

2025 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் தொடர்பான சிக்கல்கள் விதவை மற்றும் அனாதை ஓய்வூதிய பிரச ்சினைகள் சம்பள முரண்பாடுகள், சம்பள ஏற்றம், நிலுவைத் தொகை கொடுப்பனவுகள், பதவியுயல்வு மற்றும் சிரேஷ்டத்துவம ், காணி அனுமதிப்பத்திரம், அரச காணி வழங்கல்கள் போன ்ற விடயங ்கள் தொடர்பாக குறிப்பிடத்தக்க அளவிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பின ்வரும் அட்டவணை 3ஐ பார்க்கவும்.

***அட்டவணை 3 - 2024 ஆம் ஆண்டில் விடய அடிப்படையில் அரசாங்க அலுவலர்களுக்கு எதிராக பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை***

| | விடயம் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2025 |
|---|---|---|
| 1 | ஓய்வூதியம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் | 153 |
| 2 | காணி அனுமதிப்பத்திரம், அரச காணிகள் வழங்குதல் | 138 |
| 3 | தாமதிப்பு, தகுதியின்மை, அலட்சியம், அதிகார துஷ்பிரயோகம் | 63 |
| 4 | சம்பள முரண்பாடுகள், சம்பள உயர்வுகள், நிலுவைகள் , படிகள் | 40 |
| 5 | அதிகாரமளிக்கப்படாத கட்டட நிர்மாணங்கள் / தொல்லைகள் | 39 |
| 6 | பதவியுயர்வுகள், பதவி மூப்பு | 25 |
| 7 | ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை | 23 |
| 8 | சேவையில் உள்ளீர்ப்பு, ஆட்சேர்ப்பு, நியமனம், பதவி உறுதிப்படுத்தல் | 18 |
| 9 | பல்கலைக்கழகம் / பாடசாலை அனுமதி பரீட்சை பெறுபேறுகள் | 16 |
| 10 | பல்வேறு வகையானவை | 14 |
| 11 | உரிமம், கட்டட அனுமதிப் பத்திரம் | 11 |
| 12 | தொழில் முடிவுறுத்தல், மீள அமர்த்தல், பதவி நீடிப்பு | 10 |
| 13 | வீதிகள் | 9 |
| 14 | இடமாற்றம் பெறல் | 8 |
| 15 | வேலை தளத்தில் இடம்பெறும் துன்புறுத்தல் | 7 |
| 16 | மின்சாரம், நீர், தொலைபேசி இணைப்பு மற்றும் துண்டித்தல் | 6 |
| 17 | ஆறுதல் | 6 |
| 18 | நட்டஈடு, வறுமை, நிவாரணம், சமுர்த்தி | 4 |
| 19 | அக்ரஹார காப்பீடு | 4 |
| 20 | கடன்கள், கட்டணங்கள், மறு திட்டமிடல் | 3 |
| 21 | தலையிட முடியாதவை | 1031 |
| | **மொத்தம்** | **1628** |

## 2.7 அமைச்சுக்கள் / பொது நிறுனங்கள் ரீதியிலான பகுப்பாய்வு

பின்வரும் அட்டவணை அவதானிக்கும் போது அதிகபடியான முறைப்பாடுகள் உள்நாட்லுவல்கள் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு எதிராகவே கிடைத்துள்ளன என்பது தெரியவருகிறது. பின்வரும் அட்டவணை 4ஐ பார்க்கவும்.

| | அமைச்சு, திணைக்களம், அதிகாரசபை போன்றவை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2025 |
|---|---|---|
| 1 | உள்நாட்டலுவல்கள், மாவட்டசெயலகம் / பிரதேச செயலகம் | 129 |
| 2 | பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு | 77 |
| 3 | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை | 61 |
| 4 | நீர்ப்பாசனம் மற்றும் மகாவலி அதிகாரசபை | 41 |
| 5 | கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபை, சபைகள் (CPC, CEB, SLAA, RDA, SLBC, SLI | 39 |
| 6 | பல்வேறு நிறுவனங்கள் | 35 |
| 7 | அரச பாடசாலைகள் | 30 |
| 8 | ஓய்வூதியம் | 23 |
| 9 | காணி மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 19 |
| 10 | கல்வி மற்றும் உயர்கல்வி | 19 |
| 11 | பொது நிர்வாக அமைச்சு | 13 |
| 12 | கூட்டுறவு அபிவிருத்தி | 13 |
| 13 | சுகாதார மற்றும் சுதேச மருத்துவம் | 11 |
| 14 | வனப் பாதுகாப்பு | 11 |
| 15 | அரச சேவை ஆணைக்குழு ( மத்திய மற்றும் மாகாண ) | 8 |
| 16 | நீதி | 8 |
| 17 | தொழில் திணைக்களம் | 7 |
| 18 | விவசாயம் | 7 |
| 19 | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் | 6 |
| 20 | அரச வங்கிகள் | 5 |
| 21 | தபால் மற்றும் தொலைதொடர்புகள் | 5 |
| 22 | கமநல அபிவிருத்தி திணைக்களம் | 4 |
| 23 | தேசிய நீர் விநியோகம் மற்றும் வடிகால் அமைப்புச் சபை | 4 |
| 24 | நகர அபிவிருத்தி அதிகாரசபை | 3 |
| 25 | தேசிய இளைஞர் சேவை மன்றம் | 3 |
| 26 | பல்கலைக்கழகம் | 3 |
| 27 | போக்குவரத்து (SLCTB, CGR, CMV) | 3 |
| 28 | சமூகசேவை மற்றும் சமூர்த்தி | 2 |
| 29 | மதுவரித் திணைக்களம் | 2 |
| 30 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் | 1 |
| 31 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் | 1 |
| 32 | வளிமண்டலவியல் திணைக்களம் | 1 |
| 33 | மக்கள் தொகை மற்றும் புள்ளியியல் துறை | 1 |
| 34 | புத்த மத அமைச்சு | 1 |
| 35 | தேயிலை ஆராய்ச்சி வாரியம் | 1 |
| 36 | தலையிட முடியாத முறைப்பாடுகள் | 1031 |
| | **மொத்தம்** | 1628 |

**2.8 கடந்த 10 ஆண்டுகளுகளில் நிர்வாக விவகாரங்களுக்கான நாடாளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) அலுவலகத்திற்கு கிடைத்த முறைப்பாடுகள் பற்றிய பகுப்பாய்வு**

2025 ஆண்டு உட்பட கடந்த 10 ஆண்டுகளுகளில் பெறப்பட்ட முறைப்பாடுகளை அவதானிக்கும் போது அதிகபடியான முறைப்பாடுகள் 2019 ஆம் ஆண்டிலயே கிடைத்துள்ளன என்பது புலனாகிறது. அந்த எண்ணிக்கை 1794 ஆகும். அதற்கு அடுத்தபடியாக 2025 ஆம் ஆண்டில் 1628 முறை முறைப்பாடுகளும் 2023 ஆம் ஆண்டில் 978 முறைப்பாடுகளும கிடைத்துள்ளன. மிகக்குறைந்த அளவிலான முறைப்பாடுகள் 2013 ஆண்டிலயே கிடைத்துள்ளன.

*படவரைபு 5 - கடந்த 10 வருடங்களில் பெறப்பட்ட முறைப்பாடுகள்*



**அத்தியாயம் 03 - ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை**

**அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்**

**அத்தியாயம் 05 - நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை**

**அத்தியாயம் 06 - மனித வள விபர குறிப்பு**

**அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை**

# அத்தியாயம் 03

## 2025 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ - எப்

**2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட பட்ஜெட் ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | 2024 | |
|---|---|---|---|---|---|
| | **வருமானபெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ -1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ -1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ -1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ -1 |
| - | **மொத்தவருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| | **வருமானமற்ற பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 36,573,000 | 30,945,000 | ஏசீஏ -3 |
| - | வைப்புகள் | | 13,648 | 5,405 | ஏசீஏ -4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 1,731,292 | 2,076,992 | ஏசீஏ -5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **38,317,940** | **33,027,397** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அ பெறுகைகளும் (அ)+(ஆ)** | | **38,317,940** | **33,027,397** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **3,329,320** | **73,910** | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் கிடைப்பனவு = (இ)-(ஈ)** | | **34,988,620** | **32,953,487** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| 21,200,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 15,753,003 | 14,085,287 | ஏசீஏ -2(ii) |
| 21,880,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 17,294,261 | 17,025,237 | ஏசீஏ -2(ii) |
| 420,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 303,310 | 285,478 | ஏசீஏ -2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ -2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ -2(ii) |
| 43,500,000 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **33,350,573** | **31,396,001** | |
| | **மூலதன செலவினம்** | | | | |
| - | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | - | - | ஏசீஏ -2(ii) |
| 2,380,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 601,760 | 179,750 | ஏசீஏ -2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ -2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ -2(ii) |
| 120,000 | திறன் விருத்தி | 14 | 120,000 | 50,000 | ஏசீஏ -2(ii) |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | ஏசீஏ -2(ii) |
| 2,500,000 | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **721,760** | **229,750** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 13,648 | 5,405 | ஏசீஏ -4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 1,973,299 | 1,830,604 | ஏசீஏ -5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | 1,986,947 | 1,836,009 | |
| 46,000,000 | **மொத்த செலவினம் (ஊ+எ+ஏ)** | | 36,059,280 | 33,461,760 | |
| - | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி (உ-ஐ)** | | (1,070,660) | (508,273) | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | (1,070,660) | (508,274) | ஏசீஏ -7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | | | ஏசீஏ -3 |
| | | | (1,070,660) | (508,274) | |

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

### 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ -6 | 12,764,516 | 12,200,456 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ -5/5ஏ | 2,797,513 | 2,555,506 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ -3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | **15,562,029** | **14,755,962** |
| **தேறிய சொத்துக்கள்/உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 2,797,513 | 2,555,506 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 12,764,516 | 12,200,456 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ -5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ -4 | - | - |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ -3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | **15,562,029** | **14,755,962** |

பக்கஇலக்கம் முதல்4 வரைசீஏ 1 முதல்சீஏ 7 வரையானதிரிப் படிவங்களின்மூலம்சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குக்கூற்றும் குறிப்புகளின் /பின்னிணைப்புகளின்பக்கஇலக்கம் முதல்5 வரையுள்ளடங்கியுள்ளகணக்குக்குறிப்புகளின் விபரமும் இந்நிதிக் கணக்குகளின்உள்ளடங்கியுள்ளதியாகும்2025 ஆம் ஆண்டின்17.12.2025 திகதியிடப்பட்டஇல02 /2025 அரசகணக்குகள்சுற்றுநிருபம் மற்றும் அரச நிதி விதிமுறைகள்150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கமைய நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனஅதனாலேமேலேயுள்ளஇறுதிக்கணக்குகளில்குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள்தொடர்பானகணக்குக்குறிப்புகள் மற்றும் ஏனையகணக்குத்தவல்திறைசேரிப் புத்தகங்களுடன்இணக்கம் செய்யப்பட்டுள்ளதுஎன்பதையும்இணைந்ததொகைகளுடன்படுகின்ற என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ள நிருவாககட்டுப்பாட்டுத் தொகுதியொன்று அறிக்கையிடும்காலப்பகுதியில் காணப்படுகின்றது என்பதையும் நிதி நிருவாகத்திற்காக உள்ள நிருவாக தொகுதியின்வினைத்திறனை பேறாய்வு செய்தல் அதற்கு அமைவாக குதியை திருத்த நடைமுறைகள் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்ளும் அடிக்கடி மீளாய்வுக்கு மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் சான்றுப் படுத்துகிறோம்.

| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி) /ஆணையாளர்(நிதி) |
|---|---|---|
| பெயர்: | பெயர்: | பெயர்: |
| பதவி | பதவி | |
| திகதி: 2026.02.23 | திகதி: 2026.02.23 | திகதி: 2026.02.23 |
| K.B.K. Hirimburegama<br>Parliamentary Commissioner<br>for Administration (Ombudsman)<br>No: 14, First Floor, R.A. De Mel Mawatha,<br>Colombo 04. | K.B.K. Hirimburegama<br>Parliamentary Commissioner<br>for Administration (Ombudsman)<br>No: 14, First Floor, R.A. De Mel Mawatha,<br>Colombo 04. | H.P.A. PATHIRANA<br>...ministrative Officer<br>...e of the Parliamentary<br>...or Administration (Ombudsman)<br>...14, R.A. De Mel Mawatha<br>...04 |

## 3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ - சீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மை | |
|---|---|---|
| | **2025** | **2024** |
| | ரூபா | ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 835,610 | 653,400 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 36,573,000 | 30,945,000 |
| முற்பணங்களை அறவிடல் | 2,040,039 | 2,251,556 |
| வைப்புக்களின் பெறுகை | 13,648 | 5,405 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **39,462,297** | **33,855,361** |
| | | |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 33,047,263 | 31,110,524 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 303,310 | 285,478 |
| மூலதனச் சொத்துகளின் புனரமைப்புஇ மூலதன மாற்றங்கள்இ திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | 120,000 | 50,000 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 86,193 | 319,690 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 3,329,320 | 73,910 |
| முற்பணக் கொடுப்பனவு | 1,960,803 | 1,830,604 |
| வைப்புக் கொடுப்பனவு | 13,648 | 5,405 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **38,860,537** | **33,675,611** |
| | | |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்(அ)(இ) (ஆ)** | **601,760** | **179,750** |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | | |
| | | |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | 601,760 | 179,750 |
| மூலதன செலவினம் | **601,760** | **179,750** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | | |
| | **(601,760)** | **(179,750)** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்(ஈ)(ஊ)(உ)** | | |
| | - | - |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)(இ)(ஊ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| | | |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| | | |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்=(ஏ)-(ஐ)** | - | - |
| | | |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு(எ)(ஓ)(ஒ)** | - | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

### 3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு % |
| | இல்லை | - | - | - | - |

### 3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா. ,000

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| **மீண்டெழும்** | 43,500 | 43,500 | 33,350 | 77% |
| **மூலதனம்** | 2,500 | 2,500 | 170.5 | 29% |

### 3.7 *நி.பி 208* இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா ,000

| தொடர் இல. | அமைச்சு/ திணைக்களத்தி லிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| | | இல்லை | - | - | - | - |

**3.8** ***நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை***

ரூபா ,000

| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | *2024.12.31* திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி | *2024.12.31* திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி | எதிர்காலத் தில் கணக்கிட வேண்டிய து | அறிக்கையி டல் முன்னேற்ற ம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | - | | | |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | - | 12,764,516 | | - |
| 9153 | காணி | - | | | |
| 9154 | அருவமான சொத்துக்கள் | - | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | - | | | |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | - | | | |

**3.9** ***கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை*** **

*** பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்போது, கணக்காய்வாளர்நாயகத்தினால் வெளியிடப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கையினை ஸ்கேன்SCAN) செய்யப்பட்டு இங்கு இணைக்கப்பட வேண்டும்.*

## *அத்தியாயம் 04*
### *செயலாற்றுகைச் சுட்டிகள்*

**4.1** ***நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)***

| குறிப்பீட்டு சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|
| | 100%- 90% | 75%-89% | 50%- 74% |
| புகார்களைப் பதிவு செய்தல் மற்றும் ஒப்புகைக் கடிதங்களை அனுப்புதல் | √ | | |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட புகார்களை விசாரிக்க நடவடிக்கை எடுத்தல் | √ | | |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட புகார் விசாரணைகளை நிறைவு செய்தல் | √ | | |
| முடிக்கப்பட்ட விசாரணைகளுக்கான அறிக்கைகளைத் தயாரித்தல் | √ | | |
| பரிந்துரைகளும் ஆலோசனைகளும் செயல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதைச் சரிபார்த்தல் | √ | | |
| புகார்களை ஆவணப்படுத்துதல் மற்றும் காப்பகப்படுத்துதல் | √ | | |

## *அத்தியாயம் 05*

### *நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை*

**5.1** ***அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக****

****நிறுவனத்தின் நோக்கத்தின்படி நிலையான வளர்ச்சி இலக்குகளை நேரடியாக அடையாளம் காண முடியாது.***

| இலக்கு / குறிக்கோள் | அடைவுகள் | குறிகாட்டிகள் | இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%- 100% |
| - | - | - | - | - | - |

**5.2** ***நிலையான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக ****

அரசு, மாகாண சபை, உள்ளூராட்சி, சட்டபூர்வ வாரியங்கள், கழகங்கள் மற்றும் அரைஅரசு நிறுவனங்களின் அதிகாரிகள் மேற்கொள்ளும் தவறான நிர்வாகத் தீர்மானங்களால் அநியாயங்களுக்கு உள்ளான நபர்களுக்கு, அந்த அநீதிகளைச் சரிசெய்து வழங்குவதும், அந்த செயல்முறையின் மூலம் அரசுப் நிர்வாகம் திறம்படவும் பயனுள்ளதாகவும் செயல்பட அரசியல் நிர்வாக இயந்திரத்திற்கு துணை நிற்பதும், மேலும் செயற்குழு தீர்மானங்களை எடுக்கும் போது அவற்றை சரியான முறையிலும் திறம்படவும் அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் எங்களின் முக்கிய நோக்கமாகும். ஆகையால், பல்வேறு நிறுவனங்களைப் பற்றிய முறையீடுகளின் உள்ளடக்கத்திற்கிணங்க, அவை தொடர்புடைய நிறுவனங்கள் நிறைவேற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடையும் பணியில் எங்கள் நிறுவனம் மறைமுகமாக பங்களிக்கிறது. (2.6 பகுப்பாய்வின் படி)

# அத்தியாயம் 06

## மனித வள விபரம்

### 6.1 பதவியணி முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | பதவிவெற்றிடம் / (அதிகப்படியான)** |
|---|---|---|---|
| சிரேட்ட | 01 | 01 | - |
| மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| இரண்டாம் நிலை | 17 | 13 | 04 |
| ஆரம்ப நிலை | 10 | 05 | 05 |

### 6.2 **பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களுக்கான வெற்றிடங்கள் முழுமையாக நிரப்பப்படாமையால் தற்போதுள்ள அலுவலர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்

### 6.3 மனித வள அபிவிருத்தி

| நிகழ்ச்சித்திட்டத் தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக் கை | நிகழ்ச்சித் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா '000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு) | வெளியீடு/பெற்றுக் கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| ஆவண மேலாண்மை | 10 | ஒரு நாள் | உள்நாட்டு | | உள்நாட்டு | உத்தியோகத்தர்களை மனப்பான்மை அபிவிருத்தி. |

* *நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எவ்வாறு பங்களிக்கிறன என்பதை சுருக்கமாக விளக்குக.*

நிகழ்ச்சி பயிற்சி திட்டத்தின் மூலம் பெறப்படும் அறிவை பயன்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் செயல் திறனை அதிகரிக்கமுடியும்.

# 07 அத்தியாயம்

## இணக்கப்பட்டு அறிக்கை

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப் பாட்டு நிலைமை (இணங்குகின்றது/ இணங்கவில்லை) | இணங்கவில்லை என்றால் அதற்கான சுருக்க விளக்கம் | இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்கு முன்மொழியப் படும் சரியான தீர்மான நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 1 | பின்வரும் நிதிநிலை அறிக்கைகள்/கணக்குகள் உரிய திகதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | | | |
| 1.1 | வருடாந்த நிதிநிலை அறிக்கைகள் | இணங்குகின்றது | - | - |
| 1.2 | அரசாங்க அலுவலர்களின் முன்பணக் கணக்கு | இணங்குகின்றது | - | - |
| 2. | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் (நி.ஒ.445) | இணங்குகின்றது | - | - |
| 2.1 | 2023.11. 30ஆம் திகதிய 5/2023 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்கத்தின் வழிகாட்டுதல்கள் பந்திகள் 8.1 மற்றும் 8.2-இன் பிரகாரம், CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் நிலையான சொத்துக்கள் தொகுதியில் நிதி சாரா சொத்துக்களாக கணக்கிடல் | இணங்குகின்றது | - | - |
| 2.2 | ஆள்சார் ஊதிய ஆவணங்கள்/ஆள்சார் ஊதிய அட்டைகளைப் இற்றைப்படுத்தி, பேணுதல் | இணங்குகின்றது | - | - |
| 2.3 | கணக்காய்வு விசாரணைப் பதிவேட்டைப் இற்றைப்படுத்தி, பேணுதல் | இணங்குகின்றது | உள்ளக கணக்காய்வுப் பிரிவுவொன்று இல்லை | - |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேட்டைப் இற்றைப்படுத்தி, பேணுதல் | ஏற்புடையதல்ல | - | - |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குச் சுருக்கங்களையும் (CIGAS) உரிய திகதிக்கு தயாரித்து பொதுத்திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | இணங்குகின்றது | - | - |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டைப் இற்றைப்படுத்தி, பேணுதல் | இணங்குகின்றது | - | - |
| 2.7 | பொருட்பட்டியல் பதிவேட்டைப் இற்றைப்படுத்தி, பேணுதல் | இணங்குகின்றது | - | - |
| 2.8 | நுகர்வுப்பொருட்கள் பதிவேட்டைப் இற்றைப்படுத்தி, பேணுதல் | இணங்குகின்றது | - | - |
| 2.9 | சேதங்கள் பற்றிய பதிவேட்டைப் இற்றைப்படுத்தி, பேணுதல் | இணங்குகின்றது | - | - |
| 2.10 | இடர் பதிவேட்டைப் இற்றைப்படுத்தி, பேணுதல் | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.11 | அங்கத்தவர் கடன் பதிவேட்டை (CC10) இற்றைப்படுத்தி, பேணுதல் | இணங்குகின்றது | | |
| 3. | நிதிக் கட்டுப்பாட்டுக்காக பணிகளைப் பகிர்ந்தளித்தல் **(நி.ஒ.135)** | | - | - |
| 3.1 | நிதி ஒழுங்குவிதி 135-க்கு இணங்க, மீளாய்வு ஆண்டிற்காக நிறுவனத்திற்குள் நிதிசார் அதிகாரங்கள் பகிர்ந்தளிப்பு செய்யப்பட்டுள்ளமை. | இணங்குகின்றது | - | - |
| 3.2 | நிறுவனத்திற்குள் நிதிசார் அதிகாரங்கள் தொடர்பாடல்செய்யப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | - | - |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிகள் ஊடாக அங்கீகரிக்கின்றவாறு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருத்தல். | இணங்கவில்லை. | | |
| 3.4 | 2004. 05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம், அரசு சம்பளத் தயாரிப்புக் கணினி மென்பொருளைப் பயன்படுத்தும்போது, அந்த மென்பொருள் தொடர்பான முதல் கடவுச்சொல்லைக் கணக்காளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பதவிநிலை அதிகாரி மட்டுமே பயன்படுத்த வேண்டும். | இணங்கவில்லை | அலுவலகத்தில் கணக்காளர் ஒருவர் இல்லை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனைப் படி, நிருவாக உத்தியோகத்திரினால் அந்த செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. |
| 3.5 | மேலே 3.4 இல் குறிப்பிட்ட பென்பொருளுடன் தொடர்புடைய முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்செல் மூன்று மாதங்களக்கு ஒரு முறை மாற்றப்பட்டுள்ளதா? | இணங்குகின்றது | | |
| 4 | **வருடாந்த திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 4.1 | 2020.08.28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் இணைப்பு 12-இன் படி வருடாந்த செயல் திட்டத்தைத் (Annual Activity Plan)தயாரித்தல் | இணங்குகின்றது | | |
| 4.2 | மேற்படி சுற்றறிக்கையின் பந்தி 04-இன் பிரகாரம் வருடாந்த பெறுகை திட்டத்தைத் தயாரித்தல் | இணங்குகின்றது | | |
| 4.3 | **மேற்படி சுற்றறிக்கையின் பந்தி 5.2-இல் குறிப்பிடப்பட்டுள்ள திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் 04-ஆம் வழிகாட்டுதல்களின் பிரகாரம்:** | | | |
| 4.3.1 | அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையில் ஆண்டு உச்சவரம்பை நிர்ணயிப்பதற்காக, உரிய ஆண்டு முற்பண விண்ணப்பப் படிவம் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டதா? | இணங்குகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4.3.2 | மாதாந்த முற்பண விண்ணப்பப் படிவம் (TOD/IMP/4) மற்றும் கையிருப்புப் பட்டியல் அறிக்கை (TOD/IMP/10) ஆகியவை திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டதா? | இணங்குகின்றது | | |
| 5 | **கணக்காய்வு விசாரணைகள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்பட்டுள்ளமை | இணங்குகின்றது | - | - |
| 6 | **உள்ளக கணக்காய்வு** | | | |
| 6.1 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்பட்டுள்ளமை | இணங்கவில்லை. | உள்ளக கணக்காய்வுப் பிரிவுவொன்று இல்லை. | |
| 6.2 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உபபிரிவு 40(4)-இற்கு இணங்க, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை | இணங்கவில்லை. | உள்ளக கணக்காய்வுப் பிரிவுவொன்று இல்லை | |
| 6.3 | நிதி ஒழுங்குவிதி 134(3)-க்கு இணங்க, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை | இணங்கவில்லை. | உள்ளக கணக்காய்வுப் பிரிவுவொன்று இல்லை | |
| 6.4 | நிதி ஒழுங்குவிதி134(2)-க்கு இணங்க, கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்து, ஆண்டின் தொடக்கத்தில் உள்ளக கணக்காய்வுத் நிகழ்ச்சித்திட்டம்/திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளமை | இணங்கவில்லை | உள்ளக கணக்காய்வுப் பிரிவுவொன்று இல்லை | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்** | | | |
| 7.1 | மீளாய்வின் கீழான ஆண்டில், கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுவின் கூட்டங்கள் திட்டமிட்டபடி நடத்தப்பட்டமை | இணங்கவில்லை. | அலுவலகத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று இல்லை. | உள்ளக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தை நடத்துவதற்கு உள்ளக கணக்காய்வுப் பிரிவுவொன்று இல்லை |
| 8 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017-ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07வது அத்தியாயத்தின் பிரகாரம் ஆதனகொள்வனவு மற்றும் விற்பனை குறித்த தகவல்கள் கொம்றோலர் ஜெனரல் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை | இணங்குகின்றது | - | - |
| 8.2 | மேற்கூறிய சுற்றறிக்கையின் அத்தியாயம் 13- | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | க்கு இணங்க, ஒரு பொருத்தமான தொடர்பு அதிகாரி மேற்கூறிய சுற்றறிக்கையின் விதிகளைச் செயல்படுத்துவதை ஒருங்கிணைக்க நியமிக்கப்பட்டுள்ளார் மற்றும் அந்த அதிகாரி பற்றிய தகவல் கொம்ரோளர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிக்கைசெய்யப்பட்டுள்ளமை. | | | |
| 8.3 | 2020.08.28 ஆம் திகதிய அரசாங்க நிதி சுற்றறிக்கை 01/2020- ஆம் இலக்க பகுதி 1-இன் பிரிவு 11.3-இல் குறிப்பிட்டுள்ள காலசட்டகத்தினுள் நி.ஒ. 756(6) பிரகாரம் பொருட் பட்டியல் கணக்கெடுப்பு அறிக்கை உரிய காலப்பகுதிக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை. | இணங்குகின்றது | - | - |
| 8.4 | வருடாந்த பொருட்பட்டியல் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட மேலதிக, பற்றாக்குறைகள் மற்றும் பிற பரிந்துரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் செயல்படுத்தப்பட்டுள்ளமை. | இணங்குகின்றது | - | - |
| 8.5 | பாவனைக்கு உதவாத பொருட்களை அகற்றுதல் நி.ஒ. 772 இன் பிரகாரம் மேற்கொள்ளுதல் | இணங்குகின்றது | - | - |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | விசேட செலவின பிரிவுக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இருத்தல் | இணங்குகின்றது | - | - |
| 9.2 | வாகனக் குழுமத்தில் உள்ள வாகனங்களுக்கான தினசரி ஓட்டுநர் பதிவுகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல். | இணங்கவில்லை. | குழும வாகனங்கள் இல்லை | - |
| 9.3 | வாகனக் குழுமத்தில் உள்ள அனைத்து வாகனங்களிலும் அரச இலாஞ்சனை வர்ணம் பூசப்பட்டுள்ளமை. | இணங்கவில்லை. | குழும வாகனங்கள் இல்லை | - |
| 9.4 | வாகனங்கள் 06 மாதங்களுக்கும் குறைவான காலத்திற்குள் அகற்றறப்பட்டுள்ளமை. | இணங்கவில்லை. | அகற்றப்பட்ட வாகனங்கள் இல்லை. | - |
| 9.5 | வாகனப் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் நாளதுவரைப்படுத்தல். | இணங்குகின்றது | - | - |
| 9.6 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாகவும் நிதி ஒழுங்குவிதிகளின்படி செயற்படுதல். | இணங்குகின்றது | - | - |
| 9.7 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30- ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களில் எரிபொருள் பாவனையை மீள்பரிசீலனை செய்தல். | இணங்குகின்றது | - | - |
| 9.8 | 2023.08.24 ஆம் திகதிய நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை 6/2023-இன் 4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டள்ளதா | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | **வங்கி கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய திகதியில் வங்கி கணக்கு இணக்க கூற்று தயாரிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டு அவை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை. | இணங்குகின்றது | - | - |
| 10.2 | மீளாய்வின் கீழான ஆண்டில் அல்லது முந்தைய ஆண்டுகளில் இருந்து முன்னோக்கி எடுத்துச் செல்லப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகள் சீர்செய்யப்பட்டுள்ளமை. | இணங்குகின்றது | - | - |
| 10.3 | வங்கி ஒப்பீட்டு கூற்றுகளினால் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சீர்செய்யப்படவேண்டிய நிலுவைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த நிலுவைகள் ஒரு மாத காலப்பிரிவினுள்ள சீர்செய்யப்பட்டுள்ளமை | இணங்குகின்றது | - | - |
| 11 | **நிதி ஒதுக்கீடுகளின் உபயோகம்** | | | |
| 11.1 | செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் அவற்றின் வரம்புகளை மீறாதவாறு செலவுகளைச் செய்தல் | இணங்குகின்றது | - | - |
| 11.2 | நி.ஒ. 94(1) இன் பிரகாரம், செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பிறகு ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகள் பொறுப்புக்களுக்கு மாற்றுதல் | இணங்குகின்றது | - | - |
| 12 | **அரசாங்க அலுவலர்களின் முன்பணக் கணக்குகள்** | | | |
| 12.1 | வரையறைகளுக்கு இணங்கியிருத்தல் | இணங்குகின்றது | - | - |
| 12.2 | நிலுவையில் உள்ள கடன் தொகைகள் குறித்த காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை | இணங்குகின்றது | - | - |
| 12.3 | ஓராண்டுக்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் தொகைகளை சீர்செய்தமை | இணங்குகின்றது | - | - |
| 13 | **பொது வைப்புக் கணக்குகள்** | | | |
| 13.1 | காலாவதியான வைப்புகள் தொடர்பில் நி.ஒ 571 இன் பிரகாரம் நடவடிக்கையெடுத்தல். | இணங்குகின்றது | - | - |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கைப் நாயதுவரைப்படுத்தி, பேணுதல் | இணங்குகின்றது | - | - |
| 14 | **வெளிநாட்டுக் கொடைகள்** | | | |
| 14.1 | நிறுவனம் பெற்ற வெளிநாட்டு கொடைகள் தொடர்பாக 1994.04.20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | இணங்கவில்லை | வெளிநாட்டு கொடைகள் கிடைக்கப் பெறவில்லை. | |
| 15 | **முற்பணக் கணக்கு** | | | |
| 15.1 | மீளாய்வின் கீழான ஆண்டின் இறுதியில் ஐந்தொகை மீதி, திறைசேரித் தொழிற்பாடுகள் சுற்றறிக்கைக்கு இணங்க, உரிய திகதியில் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும்/அறிக்கை செய்யப்பட வேண்டும் | இணங்குகின்றது | | |
| 15.2 | நி.ஒ. 371-இன் படி வழங்கப்பட்ட இடைக்கால முன்பணம், கூறப்பட்ட பணி முடிந்த ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட | இணங்குகின்றது | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டும் | | | |
| 15.3 | நி.ஒ. 371. இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை கடந்து செல்லாமல் இடகக்கால முற்பணம் வழங்கப்பட்டுள்ளமை. | இணங்குகின்றது | - | - |
| 15.4 | அங்கீகரிக்கப்பட்ட முன்பணக் கணக்கு இருப்பு, திறைசேரி புத்தகங்களுடன் காலாண்டு அடிப்படையில் ஒப்பிடப்படும் முற்பணக் கணக்கு கூற்று அறிக்கை (TOD/IMP/05) உரிய திகதிக்கு முன்னர் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை. | இணங்குகின்றது | - | - |
| 16 | வருமானக் கணக்கு | | | |
| 16.1 | சேகரிக்கப்பட்ட வருமானங்கள் நேரடியாக வருமான் கணக்கில் வரவு வைக்கப்பட்டு அல்லது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்குள் வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளமை. | இணங்குகின்றது | - | - |
| 16.2 | தொடர்புடைய ஏற்பாடுகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை மீள செலுத்துதல். | இணங்கவில்லை | அவ்வாறான வருமானங்கள் மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை | - |
| 17 | **வருடாந்த செயலாற்றுகை அறிக்கை** | | | |
| 17.1 | 2025.05.30 ஆம் திகதிய 2ஃ2025 ஆம் இலக்க அசர நிதி சுற்றிக்கையினால் திருத்தப்பட்ட 20220. 08.28 ஆம் திகதிய 02ஃ2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றிறக்கையின் 12 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயரிக்கப்பட்டு உரிய ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் | இணங்குகின்றது | - | - |
| **18** | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| 18.1 | அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்கு அப்பால் பணியாளர்களை இணைப்புச்செய்யாமை/ஆட்சேர்க்காமை. | இணங்குகின்றது | | |
| 18.2 | அனைத்துப் பணியாளர்களுக்கும் எழுத்துமூலமான கடமைப் பொறுப்பைக் கொண்டிருக்க வேண்டும். | இணங்குகின்றது | | |
| 18.3 | 2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம், நிறுவனத்தின் அலுவர்களை ஆட்சேர்த்தல், இராஜினாமா, பணியிலிருந்து விலகுதல், பணிநீக்கம், ஓய்வு மற்றும் இறப்பு ஆகியவற்றின் காரணமாக நிறுவனத்தின் பணியாளர்களில் ஏற்படும் மாற்றங்கள் குறித்த புதுப்பிக்கப்பட்ட பணியாளர் தகவல்கள், ஒவ்வொரு காலாண்டின் முடிவிலிருந்து ஒரு | இணங்குகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாதத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல். | | | |
| 18.4 | பயனுறுதிமிக்க பணியாளர் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையைச் செயல்படுத்துதல். | இணங்குகின்றது | | |
| | **பகுதி 02.** | | | |
| 1 | பொதுமக்கள்/ஏனைய கோரிக்கை தரப்பினருக்குத் தகவல் வழங்குதல். | | | |
| 1.1 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், பொதுமக்கள்/ஏனைய கோரிக்கை தரப்பினருக்குத் விசேட செலவின பிரிவுடன் தொடர்பான தகவல்களைப் வழங்குவதற்காக ஒரு தகவல் அலுவலரை நியமித்தல். | இணங்குகின்றது | - | - |
| 1.2 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், பொதுமக்கள்/ஏனைய கோரிக்கை தரப்பினால் கோரப்படும் தகவல்கள், அவற்றை பெற்றுக்கொடுத்தல், பெற்றுக்கொடுக்காமைக்கான காரணங்களை உள்ளடக்கிள ஆவணத்தை பேணுதல் | இணங்குகின்றது | | |
| 1.3 | தகவல் அறியும் உரிமை பற்றிய ஆணைக்குழுவுக்கு அனுப்படவேண்டிய ஆண்டறிக்கையை உரிய திகதிக்கு மன்னர் அனுப்புதல் | இணங்குகின்றது | | |
| 1.4 | பொதுமக்களினால் முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளை ஏற்றல், ஆவணப்படுத்தல், அந்த முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த ஆவணத்தை இற்றைப்படுத்தல் | இணங்குகின்றது | | |
| 1.5 | நிறுவனத்தின் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக இணையத்தளமொன்றை வடிவமைத்து, இற்றைப்படுத்துதல் | இணங்குகின்றது | | |
| 1.6 | மேற்படி இணையத்தளத்தின் மூலம் பொதுமக்களின் தேவைகள், நிறுவனம் பற்றிய கற்றச்சாட்டுக்கள் அல்லது பாராட்டுகளை பிரசுரிப்பதற்கான வதிசகளை ஏற்படுத்தல் | இணங்கவில்லை | இணையத்தளத்தை விருத்திசெய்வதற்கும் இற்றைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது | |
| 2 | **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் -1** | | | |
